அரசியல், சமூக, பொருளாதார இதழ்

# எழுநிலம்

மாத இதழ் | மணம் 35 | ஏப்ரல் 2024 | திருவள்ளுவர் ஆண்டு 2055



## இவள் பெயர் பூபதி

## மறுக்கப்படும் உரிமைகள்; தொடரும் கிழக்குத் தமிழர்களின் போராட்டம்

## அனுரவுக்கு வெற்றி நிச்சயமா?




## தமிழ் பொது வேட்பாளர் சவால்களும் பின்னணியும்



## மேய்ச்சல் நில விவகாரமும் தமிழர்களின் எதிர்காலமும்

# இவள் பெயர் பூபதி



பொழில்

ஒரு தாய்
எப்படி இருப்பாள்?
எல்லா அம்மாக்களுக்கும்
ஒரு குணாதிசயம் உண்டு.

தன் குடும்பத்திற்காக
எதையும் செய்பவள்தான் தாய்.
தான் உயிர் கொடுத்த
பிள்ளைகளிற்காக
தன்
உயிரையும் கொடுக்கத்
துணிவாள்தாய்!

குடும்பத்திற்கு அன்னமிட்டு
எஞ்சியதை
உண்பவள்தான் அன்னை.
மிஞ்சாவிட்டால் என்ன?
பானைத் தண்ணீரில்
தன் வயிறு நிரப்புவாள்.
பிள்ளைகள் வயிறு
காலியாகாமல்
எப்போதும்
பார்த்துக்கொள்வாள்!

பின் தூங்கி முன் எழும் இவள்
எந்த முணுமுணுப்பும் இன்றி
குடும்பத்திற்காக
மாடாய் உழைத்து
ஓடாய்த் தேய்வாள்!

வெளியில் சென்ற பிள்ளை
வீடு திரும்பும் வரை
கண் துஞ்சாள்.
பசி மறப்பாள்!

தன் குழந்தைகளுக்கு
ஆபத்து என்றால்
யாராயிருந்தாலும்
சண்டைக்கு சென்றுவிடுவாள்!

தன் குஞ்சுகளுக்காக
ஒரு கோழியே போராடும்போது
ஒரு தாய் மட்டும்
சும்மா இருப்பாளா என்ன?

இந்தத் தாயும் அப்படித்தான்.
என்ன?
கொஞ்சம் பெரிய மனசுக்காரி
இவள்.

தன் பிள்ளைகள், தன் குடும்பம்
தன் சுற்றம்
என்பதை தாண்டி
தன் ஊர், தன் இனம்,
தனது மொழி என்று
உருகிய
பெரிய மனசுக்காரி இவள்.

தன் பிள்ளைகள்
என்று மட்டும் பார்க்காமல்
அத்தனை பிள்ளைகளினதும்
பாதுகாப்புக்கு
உத்தரவாதம் கேட்டவள்.

அநியாயத்தை
அதட்டிக் கேட்டவள்.
நீதிக்காக
பகிரங்க போர் தொடுத்தவள்.

அத்தனை பேருக்காகவும்
தனி ஒருத்தியாய்
பட்டினி கிடக்க துணிந்தவள்.
பயமுறுத்தி
பணிய வைக்க துடித்தவர்களுக்
கும்
பதறாமல்
தன் வழியில்
பதில் தந்தவள்.

நீதி கேட்பதற்கு
வயது ஒரு தடையல்ல
என்பதை நிரூபித்தவள்.
இவள் பெயர் பூபதி!!
தன்னிகரற்ற
தியாகத்தால்
எம் இனத்துக்கே
தாயாகியவள்!

அம்மா!
பூபதி அம்மா!!
அந்நியன் வெளியேறி,
அமைதி திரும்ப
பேச்சுவார்த்தை வேண்டும்
என்றாய்
சுய விருப்பில்
நீர் மட்டும் அருந்தி
கும்பி கொதிக்க
பிடிவாதமாய் இருந்தாயே!!

கண்ணெதிரில் நீ
சருகாய்ப் போவதை
தவிப்போடு நாம் பார்த்திருக்க
ஒரு திங்கள் உணவு துறந்தாய்!
எங்கள் விடியலுக்காய்
தவமிருந்து
நீ நிரந்தரமாய் கண்மூடினாய்!!

அம்மா!
உன் ஈகத்திற்கு
தலை வணங்குகிறோம் தாயே!!
உன் மூச்சுக் காற்றை
எங்களுள் வாங்கினோம்..
அதே தற்துணிவு,
அதே தன்னம்பிக்கையுடன்
முன்னே செல்கிறோம்.!!

எழுநிலம்
EZHUNILAM

மாத இதழ் | மணம்: 35
ஏப்ரல்

தொடர்புகளுக்கு:-
ezhunilam@yahoo.com
www.ezhunilam.com

# உள்ளடக்கம்...


| | |
|---|---|
| ஆசிரியர் கருத்து... | 05 |
| உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு... | 06 |
| தமிழ் பொது வேட்பாளர்... | 10 |
| ஜனாதிபதித் தேர்தல்;... | 12 |
| மறுக்கப்படும் உரிமைகள்.... | 14 |
| அனுரவுக்கு... | 17 |
| மலையகத் தமிழர்களின்.... | 20 |
| விக்கிலீக்ஸ்... | 22 |
| வட, கிழக்கில் பொருளாதார... | 25 |
| டாக்டர் ப.விக்கினேஸ்வரா... | 28 |
| முதிர் கன்னி.... | 29 |
| இடப்பெயர்வும் நானும் (பாகம்;03)... | 30 |
| ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல்... | 33 |
| வியர்வைச் சட்டை (கவிதை)... | 34 |
| ஹவானா சிண்ட்ரோம்... | 35 |
| வலை (தொடர் கதை)... | 38 |




## திருக்குறள்

**குறள் 596:**

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து"

**விளக்க உரை:**

எண்ணுவதெல்லாம் உயர்வைப்பற்றியே எண்ண வேண்டும், அவ்வுயர்வு கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை விடக்கூடாது.


எழுநிலம் ஏப்ரல் - 2024
உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு
இலங்கையில்


எழுநிலம் ஏப்ரல் - 2024
ஜனாதிபதித் தேர்தல்;
மேகலா ஸ்ரீனிவாசகம்
50 வீத வாக்கை நோக்கி நகரும் மாற்று வியூகங்கள்


எழுநிலம் ஏப்ரல் - 2024
மறுக்கப்படும் உரிமைகள்;
இலக்குவன்
தொடரும் கிழக்குத் தமிழர்களின் போராட்டம்


எழுநிலம் ஏப்ரல் - 2024
அனுரவுக்கு வெற்றி நிச்சயமா?

# அக்கறை உறவுகள்



மணம் 34 இல் உலகப் பெண்கள் நாளை வித்தியாசமாகக் கொண்டாடி அசத்தி விட்டீர்கள். ஒரு பெண் நிறுவுனரை வெளிக்கொணர அட்டகாசமான நாள் இது.

அது சரி! இவ்வளவு நாளும் ஏன் இந்தப் பெண்மணி தலைமறைவாக இருந்தார்? அடிப்படையில் ஆரம்பித்து உயர்ந்த சேவைகளைச் செய்யும் இவர் கொஞ்சமாவது தன்னை இனம் காட்டினால்தானே உதவி செய்பவர்கள் வருவார்கள்?

**வித்தியா முரளிதரன் - பெல்ஜியம்**

மார்ச் மாதத்திற்கு பொருத்தமான கவிதையாக 'பெண்' இருந்தது. ஆசிரியர் தலைப்பு பலரின் மனக்குமுறல்களை அப்படியே வெளிப்படுத்தி இருந்தது.

சமுதாயத்தை சீரழிக்கும் இந்தக் கும்பலுக்கு முடிவு கட்டாவிட்டால் சமுதாயமே சீரழிந்து விடும்.

ஜனாதிபதித் தேர்தல் என்ற பூச்சாண்டி இலங்கையில் ஓடிக் கொண்டிருந்தாலும் இதனால் தமிழ் மக்களுக்கு என்ன பயன்? இன்னும் ஒரு புதிய ஆபத்தாகவும் இருக்கலாம்.

**-சுதர்சன் வேலுப்பிள்ளை ஒட்டாவா, கனடா.**

ஐங்கரனின் கட்டுரையில் எங்கள் கோவிலுக்கு அருகில் கட்டப்பட்ட விகாரையைப் பார்க்கப் பார்க்க கோபமாக வரும் அதே சமயத்தில் என்ன செய்வது என்ற இயலாத் தன்மையும் எழுகிறது.

இப்படியே விட்டால், எங்கள் காணிகள் ஒவ்வொன்றிலும் விகாரைகள் முளைக்கும். எங்கள் பச்சோந்தி அரசியல்வாதிகள் என்ன ரணிலுக்கு பூங்கொத்து கொடுக்க ஓடி விட்டார்களா?

**-விநயா சங்கர் ஜேர்மனி.**

சீனா வளர்ந்து வருவது அமெரிக்காவுக்கு பெரிய பிரச்சனை என்றால் எங்களுக்கு அதைவிடத் தலைவலியாக உள்ளது.

தமிழர் பகுதிகளில் அடிக்கடி சீனத் தலைகள் தென்படுவதும் தமிழர் பிரதேசங்களில் சீன பெயர்ப்பலகைகள் முளைப்பதும் நாங்கள் சீனாவின் காலனியாகி விடுவோமா என்ற அச்சமாக உள்ளது.

இடையில், மனிதத் தன்மையற்ற கோட்டா புத்தகம் எழுதுகிறானாம். வேடிக்கையாக இல்லை?

**ரட்னகுமார் சுப்பிரமணியம், நியூ ஜேர்சி.**

மகளிர் தினத்தை நன்றாகக் கொண்டாடி விட்டீர்கள். 'மகளிர் நாள் பேச்சாளர்' கதை சூப்பரோ சூப்பர்.

கார்த்திக்கு வாழ்த்துகள். மக்கள் இப்படித்தான் இருக்கிறார்கள்.

வெளியில் பேசுவது ஒன்றாகவும் நடைமுறையில் வாழ்வது வேறாகவும்.

'வலை' தொடர் அருமையாகப் போகிறது.

திடீர்த் திருப்பங்கள் ஏற்படும் என்ற எனது யூகம் உண்மையாகுமா? மணம் 34 எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

**-வசுந்தரா சாரங்கன். டென்மார்க்.**

அரசியல், சமூக, பொருளாதார இதழ்
எழுநிலம்

தயவு செய்து அநுர ஒரு சிறந்த தலைவன் என்பது போல வரும் கட்டுரைகளைத் தவிருங்கள்.

எல்லோரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்.

தமிழனின் உரிமைகளைப் பறித்து அவர்களை அழிப்பது என்றால் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து விடுவார்கள்.

**-சுமித்திரா சந்திரகுமார் மர்சேய், பிரான்ஸ்.**

மார்ச் மாத புத்தகத்தின் அட்டைப்படம் அருமை. மகளிருக்கு முக்கியத்துவம் கொடுத்து அசத்தி விட்டீர்கள். கதைகள், கவிதைகளில் பிரியம் எனக்கு. இம்முறை இரண்டு கதைகள் போட்டது இரட்டிப்பு மகிழ்ச்சி. இதையே தொடருங்கள். குட்டிக் கதைகள், அறிவுரைக் கதைகள், சின்னச் சின்ன தகவல்கள் அனைத்தும் நன்று. கட்டுரைகள் நீளமாக இல்லாமல் அளவாக இருப்பதும் சந்தோசம்.

**-ராஜசேகர் குணலிங்கம். இத்தாலி.**

புதிய வாழ்வு நிறுவனத்தின் தொடர்புக்கான தகவல்களை மறந்து விட்டீர்களே? விருப்பப்படுபவர்கள் தொடர்பெடுக்கவும் உதவிகள் செய்யவும் பிரயோசனப்படும். இவர்கள் நிறைய வேலைகள் செய்வது மகிழ்ச்சி.

இவர்கள் பணி தொடர வாழ்த்துகிறோம். இடப்பெயர்வு கட்டுரை சுவாரசியமாகவும் அதே சமயம் மனதை தொடும் வண்ணமும் வருகிறது.

**புவனேஸ்வரி வேதநாயகம், லண்டன்.**

'பெண் என்னும் பொக்கிசம்' கவிதை நன்று. 'சர்வதேச துறைகளில் பெண்கள்' கட்டுரை கொஞ்சம் நீண்டிருந்தாலும் பல விடயங்களை உள்ளடக்கி நன்றாக இருந்தது.

ஐங்கரன் விக்கினேஸ்வரா எங்கிருந்துதான் தகவல்களைத் திரட்டுகிறார்.

எப்படித்தான் அவருக்கு நேரம் கிடைக்கிறது என்பது புதிர்தான். வாழ்த்துகள்.

அவர் பணி தொடரட்டும்.

**-பவித்திரா குகதாசன். நியூசிலாந்து.**



எழுநிலம் சஞ்சிகையின் கடந்த மின்னிதழ்களை நூலகம் ஆவணகத்தின் இணையத்தளத்தில் இதழ்கள் பிரிவில் பார்வையிடலாம்...
https://www.noolaham.org

## ஆசிரியர் பக்கம்

# மேய்ச்சல் நில விவகாரமும் தமிழர்களின் எதிர்காலமும்

**இலங்கையில்** வடக்கு - கிழக்கு வாழ் மக்கள் 70 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவித்துவரும் துன்ப-துயரங்கள் என்பது காலத்துக்கு காலம் வெவ்வேறு வடிவங்களில் உருவெடுத்தாலும் அதனுடைய தீவிரத்தன்மை அல்லது சிங்கள பேரினவாதம் எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் எடுத்துக்கொண்ட நிகழ்ச்சி நிரல் என்பது தொடர்ந்தவண்ணமே உள்ளது. இந்நிலையில் யுத்தம் நிறைவடைந்த பின்னரான கடந்த 15 ஆண்டுகளில் ஈழத்தமிழருக்கு எதிராக புதியதொரு யுத்தம் மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் பேரினவாத அரசுகளால் கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கிறது. இந்த யுத்தம் என்பது தமிழர்களுடைய குறிப்பாக வடக்கு-கிழக்கை தாயகமாக கொண்ட மக்களுடைய கலை-கலாசார-பண்பாட்டு-அடையாளங்களை அழித்து அவர்களுடைய பொருளாதார-வாழ்வாதார தளங்களை அழித்து தமிழினத்தை அவர்களுடைய தாயக மண்ணிலேயே ஏதிலிகளாக ஆக்கும் ஒரு நிகழ்ச்சிநிரலை பேரினவாத அரசாங்கமும் இனவாத சக்திகளும் முன்னெடுத்து வருகின்றன.

அந்த அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கால்நடைகளை நம்பி தமது வாழ்வாதாரத்தை முன்னெடுக்கும் ஒரு மக்கள் கூட்டத்துக்கு எதிராக பேரினவாத சக்திகள் பெருமெடுப்பில் முன்னெடுத்துவரும் செயற்பாட்டினால் அந்த மக்கள் பெரும் துன்பங்களை அனுபவிக்கும் அதேவேளை, அவர்களுடைய இருப்பு நடுத்தெருவில் நின்று போராடும் சூழலை ஏற்படுத்தியிருக்கிறது.தமது பாட்டன், பூட்டன் காலத்திலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பகுதியாகக் காணப்படும் மாதவனை, மைலத்தமடு, மணலேத்தம் உள்ளிட்ட இடங்களில் தமது கால்நடைகளை வளர்த்து அதிலிருந்து கிடைக்கும் பாலை விற்று தமது வாழ்வாதாரத்தை பெரும் துயருக்கு மத்தியிலும் நிம்மதியாக கொண்டுநடத்தி வந்தனர். எனினும் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் இவ்வாறு தமிழர்கள் மேற்கொண்டு வந்த வாழ்வாதாரத் தொழிலுக்கு வேறு மாவட்டத்திலிருந்து வரும் சிங்கள மக்கள் பௌத்த மதகுருவை ஆயுதமாகப் பயன்படுத்தி இங்குள்ளவர்களின் கால்நடைகள், மேயும் புற்றரைகளை உழவு செய்து அழித்தும், காடுகளை அழித்தும், வாய்பேசா மிருகங்களை துடிதுடிக்க சுட்டும், பண்ணையாளர்களை அடித்து துன்புறுத்தியும், அவர்களை அங்கிருந்து வெளியேற்றியும் வருவது மிகப்பெரும் இனவெறியின் கோரமாகும்.

இந்த இனவாதிகளின் செயற்பாட்டுக்கு எதிராகவும் தமது பரம்பரையான மேய்ச்சல் தரை நிரந்தரமாக வேண்டும் எனவும் மேய்ச்சல் தரைப் பகுதியில் அத்துமீறி குடியேறியுள்ளவர்களை உடன் வெளியேற்ற வேண்டும் எனவும் அப்பகுதியை நிரந்தர மேய்ச்சல் தரைப் பகுதியாக வர்த்தமானியில் பிரசுரம் செய்ய வேண்டும் என்றும் தங்களுக்கும் கால்நடைகளுக்கும் உயிர் உத்தரவாதம் வழங்கவேண்டும் எனவும் பல கோரிக்கைகளை முன்வைத்து மட்டக்களப்பு மாவட்ட பண்ணையாளர்கள் சுழற்சி முறையிலான தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை கடந்த 6 மாதங்களுக்கு மேலாக போராடிவருகிறார்கள். ஆனால்,இந்த விவகாரத்தில் எந்த முன்னேற்றத்தையோ ஒரு துளியளவு நீதியையோ பாதிக்கப்பட்டவர்கள் எட்டமுடியவில்லை.வடக்கு-கிழக்கு தமிழர்கள் என்பவர்கள் விடாமல் போராடிக்கொண்டே தங்களுடைய காலத்தை கடத்தவேண்டுமென்பது இலங்கையில் ஒரு எழுதப்படாத வரலாறாகவே 70 ஆண்டுகளுக்கு மேலாக இருந்துவருகிறது. அதனைத்தான் மைலத்தமடு மக்களும் அனுபவித்துவருகிறார்கள்.

நாடு ஒரு தேர்தலுக்கு முகம்கொடுக்க இருக்கிறது. இம்முறை தேர்தல் என்பது வடக்கு கிழக்கு மக்களின் வாக்குகளிலேயே தங்கியிருக்கிறது என்பது நிதர்சனம்.இந்த நாட்டில் ஒரு ஜனாதிபதியோ அல்லது ஒரு அரசாங்கமோ அமையவேண்டுமாகவிருந்தால் தமிழர்களுடைய வாக்குகளே தீர்மானிக்கும் வாக்குகளாக அமையும் ஒரு சூழல் இன்று நிலவுகிறது. இதனை தமிழர்கள் சரியாக கணிப்பது காலத்தின் தேவையாகும்.பொய் வாக்குறுதிகளுடன் தமிழர்களை நோக்கியும் தமிழர் தேசத்தை நோக்கியும் சிங்கள தலைமைகள் படையெடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.கடந்த கால வரலாறுகள் எமக்கு பெரும் படிப்பினையாக எம்முன்னால் இருக்கிறது.ஒன்றல்ல,இரண்டல்ல 70 ஆண்டுகால துரோக-ஏமாற்ற வரலாறுகள் தமிழர்கள் முன் இருக்கிறது.

இந்த வரலாற்றை வைத்துக்கொண்டு சிங்கள தலைமைகளையும் தமிழ் தலைமைகளையும் ஆட்டுவிக்கும் ஒரு தளத்தை உருவாக்குவது தமிழர்கள் முக்கியமான கடமையாகும். கிழக்கு மாகாணம் ஏற்கனவே சிங்கள குடியேற்றங்களாலும் நில ஆக்கிரமிப்புகளாலும் தமிழர்களை விட்டு மெல்ல மெல்ல வேற்று சமூகத்தவர்களுடைய கைகளுக்கு சென்றிருக்கும் ஒரு காலகட்டத்தில் மிகுதியாக இருக்கும் தமிழர்களாவது தங்களுடைய நிலத்தை பாதுகாக்கவேண்டிய மிக பொறுப்புள்ள கடமை இருக்கிறது.ஆகவே மாதவனை, மைலத்தமடு, மணலேத்தம் ஆகிய மக்களுடைய பிரச்சினையாக கருதாமல் இது ஒட்டுமொத்த கிழக்கு மாகாண மக்களுடைய-ஒட்டுமொத்த தமிழர்களுடைய விவகாரமாக கருதி ஒரு தேசமாக இந்த விவகாரத்துக்கு ஒட்டுமொத்த தமிழர்களும் ஓரணியில் திரண்டு போராடவேண்டிய காலத்தின் கடமை தமிழர்கள் அனைவருக்கும் இருக்கிறது.

அரசியல் தலைவர்களை நம்பி அவர்கள் பின்னால் செல்லும் வரலாற்று பாடத்தை விட்டுவிட்டு அரசியல் தலைவர்கள் மக்கள் பின்னால் நிற்கும் ஒரு சூழலை உருவாக்கவேண்டியது அவசியமாகும்.அவ்வாறானதொரு சூழல் ஏற்பட்டால் மாத்திரமே தமிழ் மக்கள் தங்களுடைய இருப்பை தக்கவைக்கமுடியும் என்பதுடன் சர்வதேசத்தையும் இலங்கை அரசுகளையும் தமிழர் தேசம் பக்கம் திருப்ப முடியும்.ஆகவே மாதவனை, மைலத்தமடு, மணலேத்தம் மக்களுடைய இந்த பிரச்சினைக்கு ஒரு தேசமாக தமிழர்கள் போராடுவதுடன், எதிர்வரும் தேர்தலை தமிழர்கள் நிதானமாகவும் இராஜதந்திரமாகவும் கையாளவேண்டுமென்பதை கூறிவைக்கின்றோம்.

# உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு



# இலங்கையில் நீதிக்கான போராட்டம்

**2024** ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதியன்று இலங்கையில் 2019 உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு நிகழ்ந்து ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டன. கொழும்பு பேராயத்திலுள்ள இரண்டு கத்தோலிக்க தேவாலயங்கள், கிழக்கு மாகாணத்தில் உள்ள சியோன் தேவாலயம் மற்றும் கொழும்பில் உள்ள மூன்று உயர்தர ஹோட்டல்கள் ஆகியவை தாக்குதல் நிகழ்த்தப்பட்ட இலக்குகளில் உள்ளடங்குகின்றன.

இதன் போது 40 வெளிநாட்டவர்கள் மற்றும் 45 குழந்தைகள் உட்பட சுமார் 315 பேர் வரை கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது, இது இலங்கையில் போருக்குப் பிந்தையதான மிகப் பாரிய அளவிலான படுகொலைச் சம்பவமாகும்.

சேதமடைந்த தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்கள் விரைவாக புனரமைக்கப்பட்டன. ஆனால், உயிர் பிழைத்த மற்றும் பாதிக்கப்பட்ட பல குடும்பங்களுக்கு இன்னும் மருத்துவ ரீதியான, உணர்வு ரீதியான மற்றும் பொருளாதார ரீதியான உதவிகள் தேவைப்படுகின்றன. அவர்களின் கண்ணீர், சோகம், வலி என்பன அவர்களின் வாழ்க்கை மீளக் கட்டமைதலை விட்டு வெகு தொலைவில் இருப்பதை உணர்த்தி நிற்கின்றன.

இத் தாக்குதல்கள் இஸ்லாமிய போராளிகளால் மேற்கொள்ளப்பட்டன. தாக்குதலுக்குப் பின் ஒரு இஸ்லாமியர் கொல்லப்பட்டதுடன் முஸ்லிம்களது வியாபார நிலையங்கள் மற்றும் வீடுகள் அழிக்கப்பட்டன, மற்றும் சேதத்துக்கு உள்ளாக்கப்பட்டன.

தாக்குதலுக்குப் பிறகு நீதியற்ற முறையில் பல மாதங்களாக, பல ஆண்டுகளாக குழந்தைகள் மற்றும் பெண்கள் உள்ளடங்கலாக ஏராளமான முஸ்லிம்கள் தடுத்து வைக்கப்பட்டனர். தாக்குதல்களுக்குக் காரணமான முஸ்லிம்கள் பற்றிய கடுமையான விமர்சனங்களையும், உயிர் பிழைத்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுடனான ஒருமைப்பாட்டின் வெளிப்பாட்டையும் கொண்ட கவிதைகளையும் எழுதிய ஆசிரியரும் இளம் முஸ்லிம் கவிஞருமான அஹ்னப் ஜஸீம் இவ்வாறான தேசிய மற்றும் சர்வதேச கவனத்தை ஈர்த்த நிகழ்வுகளுக்கு முகம் கொடுத்தவர்களில் ஒருவராவார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைப் பகிரங்கமாக கண்டித்தவரும் முஸ்லிம் வழக்கறிஞரும், செயற்பாட்டாளருமான

> 2012 ஆம் ஆண்டில் அன்றைய மன்னார் கத்தோலிக்க ஆயர், தமிழ் பேசும் கத்தோலிக்க மதகுருமார்கள் மற்றும் பலர், பல்லாயிரக் கணக்கான படுகொலைகள், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் பிற குற்றங்களுக்கான நீதியைப் பெறுவதில் சர்வதேச பங்களிப்பைக் கோரியபோது, கர்தினால் ரஞ்சித் அவர்கள் இவ்வாறான முயற்சிகள் இலங்கை மக்களின் அறிவுத்திறனை அவமதிக்கும் செயலாகும் என்று குறிப்பிட்டு சர்வதேச தலையீட்டை எதிர்த்தார். ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளாக, உயிர்த்த தாக்குதல்கள் தொடர்பான நீதியைப் பெற சர்வதேச பங்களிப்பைக் கோருவதில் கர்தினால் முன்னணியில் நிற்கிறார்.



ஹிஜாஸ் ஹிஸ்புல்லா இவ்வாறான மற்றுமொருவர் ஆவார். தங்கள் நாடுகளில் நிலவும் அடக்குமுறைகள் காரணமாக பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து தற்காலிக தஞ்சம் கோரி இங்கு வந்தவர்கள் மற்றும் அகதிகள் ஆகியோர் தாக்குதல்களுக்குப் பின்னான சில நாட்களில் இஸ்லாமியர்கள் என்ற ஒரு காரணத்தால் வெளியேற்றப்பட்டு, மீண்டும் இடம்பெயர்க்கப்பட்டு வீடற்றவர்கள் ஆக்கப்பட்டனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கான நீதி வழங்கப்படுவதில் இவர்களும், மறக்கப்பட்டவர்களும் மற்றும் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டவர்களும் - உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களினால் பாதிப்புக்குள்ளானவர்களும் உள்ளடக்கப்படல் வேண்டும்.

ஐந்து ஆண்டுகளாக புலனாய்வாளர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் நீதித்துறை உட்பட்ட இலங்கை குற்றவியல் சட்டக் கட்டமைப்புக்கு தாக்குதல்களுக்குக் காரணமானவர்களை கைது செய்ய முடியவில்லை. பாதுகாப்புத் தரப்புக்கு சாட்சியம் அளிக்காமலேயே பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் (IGP) ஆகியோர், அவர்களுக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். சட்டமா அதிபர் தாக்கல் செய்த ஏனைய குற்றவியல் வழக்குகள் இன்னும் நடந்து வருகின்றன.

அக்கறையுள்ள சில பொதுமக்களால் தாக்கல் செய்யப்பட்ட, முன்னாள் ஜனாதிபதி மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோர் தாக்குதல்களைத் தடுக்காதமைக்குப் பொறுப்பேற்க வேண்டும் என்ற அடிப்படை உரிமைகள் வழக்குகளில் அவர்கள் இழப்பீடு வழங்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சித்திரவதைக்கு இலக்கானவர்களுக்கு உச்ச நீதிமன்றம் வழங்கிய முந்தைய தீர்ப்புகளில் விதிக்கப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகைகளுடன் ஒப்பிடும்போது இந்தத் தொகை மிகச் சொற்பம் என்பதுடன் குற்றத்துக்கு பொறுப்பான யாரையும் சிறைப்படுத்த எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

15 மாதங்கள் கடந்தும் உச்ச நீதிமன்றம் விதித்த இழப்பீட்டுத் தொகை இதுவரை முழுமையாக வழங்கப்படவில்லை. ஜனாதிபதியின் விலக்குரிமையைக் காரணம் காட்டி அப்போதைய பிரதமரும் தற்போதைய ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவை வழக்கிலிருந்து அகற்றுமாறு தீர்ப்புக்கு முன்பதாகவே நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

அலட்சியமாக செயற்பட்டமைக்காக அரச புலனாய்வு சேவையின் (SIS) முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தனவிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உச்ச நீதிமன்றம் சிபாரிசு செய்திருந்தது. ஆயினும், அது இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

2022 ஏப்ரல் மாதம் மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் முறைப்பாடு மற்றும் 2022 மே மாதத்தில் அவரைக் கைது செய்யுமாறு கோரி பொலிஸ் மா அதிபருக்கு சமர்ப்பிக்கப்பட்ட கடிதம் என்பவற்றுக்கும் எந்த எதிர்வினையும் ஆற்றப்படவில்லை.

பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் தனது கடமைகளை நிறைவேற்றத் தவறியதாகக் குறிப்பிட்டு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக 2022 செப்டெம்பர் மாதம் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட தனிப்பட்ட முறைப்பாடு இதுவரை நிலுவையிலேயே உள்ளது. அப்போதைய பிரதிப் பொலிஸ் மா அதிபராக இருந்த தேசபந்து தென்னகோன் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் மூலம் தாக்குதல்களைத் தடுப்பதில் அலட்சியமாக இருந்ததாகக் கண்டறியப்பட்ட போதிலும், அது குறித்து பொறுப்புக் கூறுவதற்குப் பதிலாக அவர் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆரம்பத்தில் விசாரணைகளை மேற்பார்வையிட்ட முன்னாள் சட்டமா அதிபர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக 'பெரும் சதி' நடந்திருப்பதாக 2021 ஆம் ஆண்டு மே





மாதத்தில் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார். மேலும் மார்ச் 2022 இல், ஜெனீவாவில் நடத்தப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் போது, இந்தப் படுகொலை மாபெரும் அரசியல் சதியொன்றின் ஒரு பகுதியாகும் என விசாரணைகள் குறிப்பிடுகின்றன என்று கொழும்பு கத்தோலிக்க பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் அவர்கள் தெரிவித்தார்.

சர்வதேச உதவியுடனான சுதந்திரமான மற்றும் வெளிப்படைத் தன்மையுடனான விசாரணை ஒன்றிற்கு மனித உரிமைகளுக்கான ஐ.நா. ஆணையாளர் அழைப்பு விடுத்திருந்தார். தாக்குதல்களில் தொடர்புபட்ட ISIS ஆதரித்த குற்றச்சாட்டின் பேரில் மூன்று சந்தேக நபர்களுக்கு எதிராக அமெரிக்காவில் (USA) பதிவு செய்யப்பட்ட வழக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

எனக்குத் தெரிந்தவரை இது இலங்கையில் போர்க் காலகட்டத்தில் மற்றும் அதற்குப் பின்னரான காலகட்டத்தில் வெளிநாட்டவர்கள் கொல்லப்பட்ட மிகப்பெரிய படுகொலை சம்பவமாக இருந்த போதும் வேறு எந்த ஒரு நாடும் இது தொடர்பான குற்றவியல் வழக்குகளைத் தொடரவில்லை.

உண்மையையும் நீதியையும் தேடுபவர்கள் பழிவாங்கல்களை எதிர்கொண்டுள்ளனர். கடந்த ஆண்டு நீர்கொழும்பில் நீதி கோரி நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணி மற்றும் கூட்டத்தை நிறுத்த முயன்ற பொலிஸார் அதற்கு நீதிமன்றத் தடையுத்தரவைக் கோரிய போதும் தடையுத்தரவை வழங்க பதில் நீதவான் மறுத்துவிட்டார்.

கடந்த ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினமன்று பொப்பிட்டிய புனித நிக்கோலஸ் தேவாலயத்தில் இருந்து கட்டுவாப்பிட்டி புனித செபஸ்டியன் தேவாலயம் வரை (தாக்குதல்களால் அதிகம் பாதிக்கப்பட்ட தேவாலயம்) உண்மை மற்றும் நீதி கோரும் வாகன அணிவகுப்பில் பதாகைகள், கறுப்புக் கொடிகள் மற்றும் ஒலிபெருக்கிகள் என்பவற்றைப் பயன்படுத்துவதற்கு பொலிஸார் தடை விதித்திருந்தனர்.

சத்தியம் மற்றும் நீதிக்காக குரல் கொடுக்கும் மூன்று முக்கிய கத்தோலிக்க பாதிரியார்கள் மீது கொழும்பு கத்தோலிக்க பேராயருக்கு எதிராகச் சதி செய்கிறார்கள் என ஊடக அறிக்கை ஒன்று குற்றம் சாட்டியது.

அரசியல் சதி என்று பகிரங்கக் குற்றச்சாட்டை முன்வைத்த, வெளிப்படையாக குரல் கொடுக்கக்கூடிய செயற்பாட்டாளரான ஒரு இளைஞரான ஷெஹான் மாலக்க கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட போதிலும், கொழும்பு மேல் நீதிமன்றத்தில் அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்னர், யுத்தத்தின்போது, யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் கத்தோலிக்க மறை மாவட்டங்களில் அமைந்துள்ள குருநகர், அல்லைப்பிட்டி மற்றும் பேசாலை போன்ற இடங்களில் அமைந்துள்ள பல தேவாலயங்கள் கடற்படை மற்றும் ஆயுதப்படைகளால் தாக்கப்பட்டு நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் படுகாயமடைந்தனர்.

இவற்றுக்கும், மூன்று தசாப்த கால யுத்தத்தின் போதான சட்டத்திற்கு புறம்பான பல்லாயிரக்கணக்கான மரண தண்டனைகள் மற்றும் பலவந்தமான காணாமல் ஆக்கப்படுதல்கள் உட்பட்ட பல கடுமையான குற்றங்களுக்கும் குற்றவியல் சட்ட ரீதியான பொறுப்புக்கூறல்களோ போதுமான இழப்பீடுகளோ இதுவரை வழங்கப்படவில்லை.

பாதிக்கப்பட்டவர்களில் கத்தோலிக்க தமிழ்ப் பாதிரியார்களான 1985 இல் இராணுவத்தால் கொல்லப்பட்ட வண.மேரிபாஸ்டியன், 2006 ஆம் ஆண்டு கடற்படைக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழையும் சோதனைச் சாவடியில் கடைசியாகக் கண்டதன் பின்னர் காணாமல் போன வண..ஜிம் பிரவுன், மற்றும் 2009 ஆம் ஆண்டு யுத்தத்தின் இறுதியில் இராணுவத்திடம் சரணடைந்து பின்னர் காணாமல் போன பலரில் உள்ளடங்கி இருந்த ஊணு. பிரான்சிஸ் ஜோசப் ஆகியோரும் அடங்குவர்.

இலங்கையில் போருக்குப் பிறகு சுவிசேஷக் கிறிஸ்தவர்களும் இஸ்லாமிய மற்றும் இந்து மதங்களைச் சேர்ந்த மக்களும் பல துன்புறுத்தல்களுக்கு முகம் கொடுத்துள்ள போதும் அவற்றுக்கான பொறுப்புக் கூறல்கள் மிக அரிதாகவே காணப்படுகின்றன.

2019ஆம் ஆண்டில் உயிர்த்த ஞாயிறுக்கு முன்னதான 11 ஞாயிற்றுக்கிழமைகளில் கிறிஸ்தவ தேவாலய சேவைகளுக்கு பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டதுடன் 9 மாவட்டங்களில் குறைந்தது 13 தேவாலயங்கள் பாதிப்புக்குள்ளாயின. 2019 ஆம் ஆண்டின் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு முன்னதாக கிறிஸ்தவர்களுக்கு எதிராக சுமார் 35 சம்பவங்கள் மற்றும் 70 அத்துமீறல்கள் பதிவாகியுள்ளன.

இலங்கையில் நீதியை நிலைநாட்டுவதில் இரண்டு முக்கிய சவால்கள் உள்ளன. ஒன்று முழுமையான நீதியைப் பெறுவது, மற்றது, நீதிக்கான போராட்டங்களுக்கான ஒரு ஐக்கிய முன்னணியை உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் உருவாக்குவது.

முழுமையான நீதி என்பதில் உண்மையைத் தேடுதல் மற்றும் குற்றவியல் ரீதியான, விசேடமாக சூத்திரதாரிகளின், பொறுப்புக்கூறல்கள் என்பவை உள்ளடங்கி இருத்தல் வேண்டும். எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்களைத் தடுக்க இவை இரண்டுமே மிக முக்கியமாகும். நீதியானது இழப்பீடுகள் உட்பட உள





மற்றும் உடல் ஆரோக்கியம், கல்வி, வாழ்வாதாரம் போன்றவற்றிற்கான உரிமைகளை உறுதி செய்யக்கூடிய நீண்டகால மற்றும் போதுமான மீள் கட்டமைத்தல்களை உள்ளடக்கி இருத்தல் வேண்டும். தொடர்ந்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களும் சர்வதேச சமூகமும் இரு முனைகளிலுமே தோல்வியையே அடைந்துள்ளன.

அனேகமான உயிர் பிழைத்தவர்கள், மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இழப்பீடுகள் குறித்து அவநம்பிக்கையைக் கொண்டிருந்த போதிலும். கிறிஸ்தவ ஆலயங்களின் தலைவர்களின் மற்றும் சிவில் சமூகத்தின் குரல் எழுப்பல்கள் ஆகியவை உண்மை, குற்றவியல் ரீதியான பொறுப்புக் கூறல்கள் மற்றும் இழப்பீடுகள் குறித்து விசேட கவனம் செலுத்துகின்றன.

கத்தோலிக்க திருச்சபை உள்ளிட்ட இலங்கையர்களுக்கு உள்ள மற்றுமொரு சவாலானது இன, மத, புவியியல் மற்றும் இன்னபிற பிரிவினைகளுக்கு அப்பால், உயிர் பிழைத்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஆகிய அனைவருக்கும் நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு கைகோர்ப்பதாகும்.

தமிழர்கள் தம் நீதிக்கான குரல் கொடுத்தல்களில் பெரும்பாலும் போர்க்கால அட்டூழியங்களில் கவனம் செலுத்தினாலும் சிங்களவர்கள் பெரும்பாலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள், பொருளாதார குற்றச் செயல்கள் மற்றும் சட்டத்தின் ஆட்சி என்பவற்றில் கவனம் செலுத்துகின்றனர்.

2012 ஆம் ஆண்டில் அன்றைய மன்னார் கத்தோலிக்க ஆயர், தமிழ் பேசும் கத்தோலிக்க மதகுருமார்கள் மற்றும் பலர், பல்லாயிரக் கணக்கான படுகொலைகள், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் பிற குற்றங்களுக்கான நீதியைப் பெறுவதில் சர்வதேச பங்களிப்பைக் கோரியபோது, கர்தினால் ரஞ்சித் அவர்கள் 'இவ்வாறான முயற்சிகள் இலங்கை மக்களின் அறிவுத்திறனை அவமதிக்கும் செயலாகும்' என்று குறிப்பிட்டு சர்வதேச தலையீட்டை எதிர்த்தார்.


ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளாக, உயிர்த்த தாக்குதல்கள் தொடர்பான நீதியைப் பெற சர்வதேச பங்களிப்பைக் கோருவதில் கர்தினால் முன்னணியில் நிற்கிறார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் நடந்து 5 வருடங்கள், யுத்தம் முடிவடைந்து 15 வருடங்கள் கடந்துள்ள நிலையில் கடந்த 2 ஆண்டுகளாகக் காணப்படும் பொருளாதார நெருக்கடியானது பாரிய மக்கள் போராட்டங்களுக்குத் தூண்டுகோலாய் அமைந்து, ஊழல் மிகுந்த, சர்வாதிகார மற்றும் இனவாத ராஜபக்ஷ குடும்ப ஆட்சியை இலங்கையில் முடிவுக்குக் கொண்டு வந்தது.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல் ஆகியன இந்த வருடமும் அடுத்த வருடமும் நடாத்தப்பட உள்ளதுடன், நீண்டகாலமாக நிலுவையில் உள்ள உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை தேர்தல்களும் விரைவில் நடாத்தப்படலாம் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது.

சாட்சியங்களை சேகரிப்பதில் கவனம் செலுத்தல் பற்றிய இலங்கையின் பொறுப்புக் கூறல் குறித்த செயல் திட்டத்தை புதுப்பித்தல் சம்பந்தமாக இந்த வருட இறுதியில் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் முக்கிய அமர்வின்போது பரிசீலிக்கப்படவுள்ளது.

அனைத்து மக்களும் ஒன்றிணைந்து முழுமையான நீதிக்கான வலுவான மற்றும் ஒன்றிணைந்த போராட்டங்களை முன்னெடுப்பதற்கு இதுவே சரியான தருணமாகும்.



இலங்கையில் போருக்குப் பிறகு சுவிசேக் கிறிஸ்தவர்களும் இஸ்லாமிய மற்றும் இந்து மதங்களைச் சேர்ந்த மக்களும் பல துன்புறுத்தல்களுக்கு முகம் கொடுத்துள்ள போதும் அவற்றுக்கான பொறுப்புக் கூறல்கள் மிக அரிதாகவே காணப்படுகின்றன. 2019 ஆம் ஆண்டில் உயிர்த்த ஞாயிறுக்கு முன்னதான 11 ஞாயிற்றுக்கிழமைகளில் கிறிஸ்தவ தேவாலய சேவைகளுக்கு பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டதுடன் 9 மாவட்டங்களில் குறைந்தது 13 தேவாலயங்கள் பாதிப்புக்குள்ளாயின. 2019 ஆம் ஆண்டின் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு முன்னதாக கிறிஸ்தவர்களுக்கு எதிராக சுமார் 35 சம்பவங்கள் மற்றும் 70 அத்துமீறல்கள் பதிவாகியுள்ளன.



எஸ் சீலன், (சிவில் சமூக செயற்பாட்டாளர்)


# தமிழ் பொது வேட்பாளர் சவால்களும் பின்னணியும்

இந்த விடயத்தை எழுதுவதற்கு முன்னர் ஒரு விடயத்தை எழுதுவதற்கு முனைகின்றேன். தமிழினம் தனக்கு கிடைக்கின்ற வாய்ப்புக்களை எல்லாம் பல சந்தர்ப்பங்களில் பயன்படுத்த தவறியிருக்கின்றோம் என்ற கசப்பான உண்மை பலருக்கு விளங்குவது கடினம்.

தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் உள்ள சவால்கள்.

தமிழ் பொது வேட்பாளரை கட்சி அரசியலாக்க முயற்சி செய்வார்கள் - இதற்கு கட்சி அரசியலில் இருப்பவர்கள் மக்கள் நலனை விடுத்து தங்கள் சுயநலனை முன்னிறுத்துவதே முதற் காரணம். கட்சி அரசியலாக மாற்றி ஏனைய கட்சிகளின் ஆதரவுத் தளத்தை மலினப்படுத்துவதோடு மக்களை குழப்பத்துக்குள்ளாக்குவது என்பதுதான் இவர்கள் செய்யும் முதல் வேலை.

ஏன் என்றால் தமிழ் பொது வேட்பாளர் தமிழ் தேசிய இனத்தின் தேசிய அரசியலை ஒழுங்குபடுத்தி உறுதியான தளத்தில் திரட்சியாக்கிய புதிய பரிமாணத்தை தொடக்கூடும் என்பதால் கட்சிகளின் தலைமைகளின் எதிர்காலம் குறித்து அச்சமடைகின்றார்கள்.





> எமது மக்களுக்கான இனப் பிரச்சனைக்கான தீர்வை முன்நிறுத்தி அந்த கொள்கையின் பால் மக்களை வாக்களிக்க செய்வது மக்கள் ஆணையாகும். அதாவது எமது மக்களுக்கான நிலைப்பாடாக ஏற்க முடியும். ஆனால் மக்களை வாக்களிக்காமல் செய்து மக்கள் ஆணையை தந்துள்ளார்கள் என்றால் அது ஜனநாயக படுகொலையாக கொள்ள முடியும்.

## மக்களைத் திரட்ட முடியவில்லை

முள்ளிவாய்க்கால் பேரவலம் இடம்பெற்று 15 ஆண்டுகளை கடக்கவிருக்கின்ற இந்த காலகட்டம் வரைக்கும் தமிழ் தேசியக் கட்சிகளால் மக்களை ஓரணியில் திரட்சியாக்க முடியவில்லை என்ற தோல்வியை கட்சிகள் ஏற்றுக் கொள்ள வேண்டும். காரணம் நீங்கள் மக்களை கொள்கைகளால் கூறு போட்டவர்கள்.

இனப்பிரச்சனையை 15 ஆண்டுகளில் நீர்த்து போக செய்தவர்கள். இனப்பிரச்சனைக்கான அடிப்படை காரணம் என்ன? இலங்கை பாராளுமன்றத்தில் இயற்றப்படுகின்ற சட்டங்களே காரணம்.




சட்டங்களை இயற்றும் போது எந்தவொரு தாக்கத்தையும் செலுத்த முடியாத நிலையில் தமிழர்கள் இருப்பதுதான் காரணம் என்றால் சமஸ்டி பாராளுமன்ற முறையில் மாற்றம் கொண்டு வருமா? ஒரு நாடு இரு தேசம். இதில் ஒரு நாடு என்றால் பாராளுமன்றம் மாறுமா? அடுத்தது 13 வது திருத்தம் இது பாராளுமன்ற நடைமுறையை மாற்றுமா?

இவை பேச்சளவிலும் சொல்லளவிலும் வேறுபட்டதாய் இருக்கலாம். ஆனால் ஒரே பாராளுமன்ற நடைமுறை கொண்டவை என்பது பலருக்கு விளங்கும்.

## இனவாதமற்ற பரப்புரை?

எனவே, யுத்தம் முடிவடைந்த பின்னர் 15 ஆண்டுகளின் பின்னரும் எமது மக்களின் அபிலாசைகளையும் தியாகங்களையும் கட்சி அரசியலுக்காய் அடகு வைத்தால்? காலம் நிச்சயம் பதிலளிக்கும்.

தென்னிலங்கையில் இனவாதம் தூண்டப்படும் என்ற பரப்புரை.

இனவாதமற்ற அரசியல் பரப்புரை தென்னிலங்கையில் இருந்த துண்டா..? பின்னர் என்ன புதிதாய் தோன்றுவது போன்ற பரப்புரை..?



மாறி மாறி ஆட்சிக்கு வந்த 7 இலங்கை சனாதிபதிகளும் இன வாதத்தையே தூண்டியுள்ளனர்.

அதன் விளைவைத்தான் இப்போது இலங்கை அனுபவிக்கின்றது. பெரிய வெளிநாட்டு சக்திகள் இருக்கலாம் என்ற பரப்புரை - தமிழர்களுக்கு சுயாட்சி தீர்வை தருவதற்கு வெளிநாட்டு சக்திகள் துணையாக நின்றால் என்ன தவறு உள்ளது...?

சர்வதேச நீதி பொறிமுறையை எதிர்பார்த்து காத்திருக்கின்றீர்கள் என்றால் சர்வதேசம் என்றால் யார்? அமெரிக்கா சார் மேற்குலக நாடுகளா? அல்லது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளா? அல்லது இந்தியா...? அல்லது சீனா? யார் சர்வதேசம்...?

தன் மடியில் கனம் இல்லாத போது பூகோள அரசியலை பயன்படுத்தும் இராஜதந்திரம் தெரிய வேண்டும்.

## வாக்குகளின் சக்தி

தென்னிலங்கையில் எவரையோ கொண்டு வருவதற்கான முயற்சி என்ற பரப்புரை- இலங்கை அதிபர் தேர்தலை பொறுத்தவரை தமிழ் பேசும் இனத்தின் வாக்குகள் இன்றியே தென்னிலங்கையில் சனாதிபதி தெரிவாக முடியும் என்றால், தமிழ் பேசும் இனத்தின் வாக்குகளின் சக்தி வலுவிழந்துள்ளது. அப்படியென்றால் தமிழ் பேசும் இனம் வாக்குகளை வலுவாக்குவதற்கான தளமாக தமிழ் பொது வேட்பாளர் என்பதை பயன்படுத்த முடியும். எனவே இந்த பரப்புரை அடிப்படையில் நியாயமற்றது.

இறுதி நேரத்தில் பொது வேட்பாளர் சோரம் போக வாய்ப்புண்டு என்ற பரப்புரை- ஒரு வலுவான பொதுத் தளத்தில் பொது வேட்பாளர் நிர்ணயிக்கப்படுவதால் இது வெறும் கற்பனையான குற்றச்சாட்டு.

தமிழ் பொது வேட்பாளருக்கு பின்னால் தென்னிலங்கை சக்தி உள்ளது. உண்மை என்னவென்றால் தென்னிலங்கை அரசியல் களம் தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் அச்சம் அடைந்துள்ளது.

காரணம், இது வரைக்கும் ஏதோ ஒரு வார்த்தையை நம்பவைத்து எம்மை திசைதிருப்பி தென்னிலங்கையருக்கு வாக்களிக்க செய்து 'தமிழ் மக்களின் இனப்பிரச்சனையை நாங்கள் உள்ளக பொறிமுறையை பயன்படுத்தி தீர்த்துக் கொள்வோம் . அதற்காகத்தான் எமக்கு அவர்கள் வாக்களித்து இருக்கின்றார்கள்' என்ற பிரச்சாரம் சர்வதேசத்திற்கு செய்யப்பட்டுள்ளது.

இது தோல்வியாகி விடும் என்று அச்சப்படுகின்றார்கள். எனவே தமிழ் பொது வேட்பாளரை எதிர்ப்பவருக்கு பின்னால்தான் தென்னிலங்கை சக்தியுள்ளது என்ற சந்தேகம் வலுவாகின்றது.

## ஜனநாயகப் படுகொலையா?

வாக்களிக்காது ஒதுங்க வேண்டும் என்ற பரப்புரை- எமது மக்களை ஜனநாயகத்துக்கு எதிரானவர்கள் என்பதை சர்வதேசத்திற்கு காட்ட முனையும்.



எமது மக்களுக்கான இனப் பிரச்சனைக்கான தீர்வை முன்நிறுத்தி அந்த கொள்கையின் பால் மக்களை வாக்களிக்க செய்வது மக்கள் ஆணையாகும். அதாவது எமது மக்களுக்கான நிலைப்பாடாக ஏற்க முடியும். ஆனால் மக்களை வாக்களிக்காமல் செய்து மக்கள் ஆணையை தந்துள்ளார்கள் என்றால் அது ஜனநாயக படுகொலையாக கொள்ள முடியும்.

அதாவது மக்களை பங்காளர்களாக்கி மக்கள் எமது கொள்கைக்கு தரும் ஆதரவே பூரண மக்கள் ஆணையாகும். எனவே விமர்சனம் என்பது தெளிவை அதிகரிக்கும் ஒரு தந்திரோபாயம்தான் .

தமிழ் போது வேட்பாளர் என்பது 21 ஆம் நூற்றாண்டில் எமது இனப்பிரச்சனையை சர்வதேச உதவியுடன் தாமே தீர்த்துக் கொள்ளும் நுட்பமான இராஜதந்திர நகர்வுதான்.

# ஜனாதிபதித் தேர்தல்;



மேகலா ஸ்ரீனிவாசகம்

# 50 வீத வாக்கை நோக்கி நகரும் மாற்று வியூகங்கள்

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் வாரத்தில் நடாத்தப்படும் என்ற தகவல் வெளியானதைத் தொடர்ந்து, அரசியல் கட்சிகளின் தலைவர்கள் குறைந்தபட்சம் 50 வீதத்துடன் மேலதிகமாக ஒரு வாக்கையேனும் பெற்று, ஜனாதிபதி ஆசனத்தில் அமருவதற்கான புதிய வியூகங்களை வகுக்க ஆரம்பித்துள்ளதாக டெயிலி மிரர் ஆங்கில செய்தி இணையத் தளம் விமர்சித்துள்ளது.

முன்னதாக அறிவிக்கப்பட்டதற்கு அமைய, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதிய சின்னத்தில் போட்டியிடும் தேசிய வேட்பாளராக தன்னை முன்னிலைப்படுத்தி வருகின்றார்.

அத்துடன், தமக்கு ஆதரவளிக்குமாறு அனைத்து தரப்பினருக்கும் அழைப்பு விடுத்துள்ளமையையும் அவதானிக்க முடிகிறது என்ற தொனியிலும் டெயிலி மிரர் சுட்டிக்காட்டியுள்ளது.

## பகிரங்கமான விடயம்

யானைச் சின்னத்தில் போட்டியிட்டால் தான் வெற்றிபெற வாய்ப்பில்லை என்பதை நன்கு அறிந்த ரணில் விக்ரமசிங்க, 50 வீத வாக்குத் தளத்தை இலக்காகக் கொண்டு தன்னை ஆதரிக்க எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேரம் பேசுகி வருகிறார் என்பது பகிரங்கமாகத் தெரிகிறது.

தற்போதைய நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சில முக்கிய உறுப்பினர்கள் ஏற்கனவே ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு



வெளியானதும், ரணிலுக்கு ஆதரவு வழங்கக்கூடிய முறையில் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் சில முக்கிய நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் ரணில் பேரம் பேசுகிறார்.

இந்த அனைத்து விவாதங்கள் மற்றும் பேச்சுவார்த்தைகள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இதுவரை



50வீத வாக்குத்தளத்தை உறுதிசெய்து கொள்ளும் சூழல் உருவாகிவிட்டதா என்பது இன்னமும் சந்தேகமாகவே உள்ளது.

இந்தநிலையில், வெற்றியை இலக்காகக் கொண்டு ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது அரசியல் கட்சிகளுடன் கூட்டணி அமைக்கும் நிலைமையே பெரும்பாலும் காணப்படுகிறது.

## ராஜபக்ச தரப்பின் உத்தி

இதனிடையே, பிளவடைந்துள்ள ராஜபக்சதலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்கும் அதேநேரம், ஏனையவர்கள் தமது சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு பிரயத்தனம் காட்டி வருகின்றனர் என்பதும் மற்றுமொரு தகவல்.

இதன்படி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ் நிச்சயமாக ஒரு வேட்பாளர் களமிறக்கப்படும் சாத்தியம் காணப்படுகிறது. இதனையே, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தமது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் எனவும், மொட்டுதான் சின்னமாக இருக்குமெனவும் நாமல் சுட்டிக்காட்டுகிறார். எவ்வாறாயினும், கட்சி யாரை களமிறக்குவது என்பது குறித்து இன்னும் தீர்மானிக்கவில்லை எனவும், ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட பலரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டு வருவதாகவும் நாமல் மற்றைய தகவல் ஒன்றையும் கசிய விட்டுள்ளார்.

> ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தமது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் எனவும், மொட்டுதான் சின்னமாக இருக்குமெனவும் நாமல் சுட்டிக்காட்டுகிறார். எவ்வாறாயினும், கட்சி யாரை களமிறக்குவது என்பது குறித்து இன்னும் தீர்மானிக்கவில்லை எனவும், ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட பலரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டு வருவதாகவும் நாமல் மற்றைய தகவல் ஒன்றையும் கசிய விட்டுள்ளார்

## சஜித்தின் நிலைமை

இதன்படி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, தமது கட்சியின் வேட்பாளர் ஒருவரை நிறுத்தினாலும், 50 வீத வாக்குகள் உறுதி செய்யப்படுமா என்பது கேள்விக்குறியே. ஜனாதிபதி என்ற நிறைவேற்று அதிகாரத்தை வெற்றிகொள்வதற்குத் தீவிர பிரசாரத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கும். இப் பின்புலத்தில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிடவுள்ள சஜித் பிரேமதாசவின் நிலையும் இவ்வாறே காணப்படுகின்றது.

சஜித் கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் ஏற்கனவே ரணில் விக்ரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்திவரும் நிலையில், அவர்கள் ரணிலுக்கு ஆதரவளித்தால் வாக்குகள் மேலும் பிரிந்துவிடும்.

ஆகவே, 50 வீத வாக்குத் தளத்தை பாதுகாப்பதற்கு கட்சியின் அனைத்து உறுப்பினர்களையும் தம்வசப்படுத்த வேண்டிய கட்டாயச் சூழல் சஜித் பிரேமதாசவுக்கு ஏற்பட்டுள்ளது.

இதேநேரம், ஜேவிபியின் அரசியல் கூட்டணி என அழைக்கப்படும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க இலங்கைத்தீவு முழுவதிலும் பரவிவரும் தமக்கான ஆதரவை சாதகமாக பயன்படுத்த முனைகின்றார்.

## வெசாக்கின் பின்னரான அறிவிப்பு?

இலங்கைத்தீவு முழுவதையும் மையப்படுத்தி மக்கள் சந்திப்புகளை நடத்தித் தமது தேர்தல் பிரசாரத்தை முன்னெடுத்துள்ள போதிலும் 50 வீத வாக்குத்தளம் கிடைக்குமா என்பதைத் தற்போதைக்கு அனுமானிக்க முடியாது.

இப் பின்னணியில் வெசாக் விடுமுறையின் பின்னர் ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படும் அதேவேளை, வேறு சில முக்கிய சலுகை - நிவாரண அறிவிப்புகளும் வெளிவர வாய்ப்புள்ளமை பட்டவர்த்தனம்.

சலுகை - நிவாரண அரசியல் விஞ்சிக் காணப்படும் காலமிது.



# மறுக்கப்படும் உரிமைகள்;




இலக்குவன்

# தொடரும் கிழக்குத் தமிழர்களின் போராட்டம்

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் 1989 ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் உப பிரதேச செயலகத்தை முழுமையான பிரதேச செயலகமாக மாற்றுவதற்கு இன்றுவரை முடியாமல்தான் இருக்கிறது. அப்படியானால் தமிழர்களுக்கு இருக்கும் அரசியல் அதிகார இயலுமை என்ன என்ற கேள்வியே கல்முனை தமிழ்ப்பிரிவு பிரதேச செயலக விவகாரத்தில் எல்லோருக்கும் தோன்றும்.



பிரதேச செயலகத்தின் அதிகாரத்தினைப் பெற்றுக் கொள்ளும் வகையிலும், கல்முனை பிரதேசத்தில், பரம்பரையாக வாழும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளில் இருந்து விடுவிக்குமாறு கோரியும் மார்ச் 25 ஆம் திகதி முதல் போராட்டம் முன்னெடுக்கப் பட்டிருக்கிறது.. இதற்கு முன்னரும் பல தடவைகளில் போராட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. அதனால் இதுவொன்றும் புதிதல்ல.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம், முழுமையான பிரதேச செயலகமாக தரமுயர்த்தப் படாத காரணத்தினால் அப் பிரதேசத்தில் வாழும் தமிழர்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்திற்கு, அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென நிதி ஒதுக்கப் படுவதில்லை என்பது போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளவர்களது கருத்து.

கல்முனை வடக்கு (தமிழ் பிரிவு) பிரதேச செயலக பிரிவு சுமார் 39,000 சனத்தொகையையும் 29 கிராம சேவகர் பிரிவுகளையும் 06 பாரம்பரிய தமிழ் கிராமங்களையும் உள்ளடக்கிய தான ஒரு பிரதேச செயலகம். இந் நிர்வாக அலகானது 1989ஆம் ஆண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவாக ஸ்தாபிக்கப்பட்டது.



பின்னர் 93/600/034 இலக்க 93.03.17 திகதிய, 93/600/034(1) இலக்க 93.03.31 திகதிய அமைச்சரவை மசோதாக்கள் மற்றும் 93.07.09 ஆம் திகதிய அமைச்சரவை உப குழுவின் அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் 93.07.28 ஆம் திகதி அமைச்சரவையின் அனுமதியுடன் பிரதேச செயலகமாக மாற்றப்பட்டது. அதனடிப்படையில் தனியான தொரு பிரதேச செயலக பிரிவாக பொது மக்களுக்கான சேவைகளை வழங்கிவருகின்றது.

2002 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சாய்ந்தமருது பிரதேச செயலகம் 2006 ஆம் ஆண்டு முழுமையான பிரதேச செயலகமாக இயங்க முடியுமாயின், 35 வருடங்களாக இயங்கும் கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் மாத்திரம் ஏன் தரம் உயர்த்தப்பட முடியாது என்ற நாடாளுமன்ற உறுப்பினர்களது கருத்தும் வெளிவருகிறது.

உண்ணாவிரதங்களையும், போராட்டங்களையும் நடத்தியதுடன் பல்வேறு நிருவாக ரீதியான முயற்சிகளையும் அரசியல்வாதிகள், கல்முனை சிவில் சமூகத்தினர் மேற்கொண்டிருந்த போதிலும் இதுவரையில் எதுவுமே நடைபெறவில்லை.

இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக புளொட் அமைப்பின் உறுப்பினராக இருந்தபொழுது உண்ணாவிரதங்களையும், போராட்டங்களையும் நடத்தினார். 2019 இல் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற பொழுது ஜனாதிபதி தெரிவாகிய ஒரு வாரத்தில் கல்முனை தமிழ்ப்பிரிவு தரம் உயரும் என்று முழக்கமிட்டார்.

கோட்டபாய அரசாங்கத்தில் அவரினால் கல்முனை பிரதேச செயலகத்தினைத் தரம் உயர்த்திக் கொடுக்க முடியவில்லை. முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச போய் இப்போது ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருக்கிறார். வியாழேந்திரன் அமைச்சராக இப்போதும் இருக்கிறார்.

அடுத்தவர், விடுதலைப் புலிகளின் கிழக்குத் தளபதியாக இருந்து அவ் அமைப்பிலிருந்து பிரிந்து அரசுடன் இணைந்து பிரதி அமைச்சரான கருணா எனும் விநாயகமூர்த்தி முரளிதரன், கல்முனை விடயத்தில் பல உறுதிப்பாடுகளைக் கூறியிருந்தார். ஒன்றும் நடைபெறவில்லை. கடந்த தேர்தலில் கல்முனை தமிழ்ப் பிரிவினைத் தரமுயர்த்துவேன் என்ற தேர்தல் அறை கூவலுடனேயே அவர் போட்டியிட்டார். அவரது இந்த உறுதியை நம்பி வாக்களித்த மக்களுக்கு அம்பாறைக்கு தமிழ்ப் பிரதிநிதித்துவமே இல்லாமல் போனது. அதாவுல்லா நாடாளுமன்ற உறுப்பினராவதற்கும் வழியை ஏற்படுத்திக் கொடுத்தார் கருணா என்கிற முரளிதரன்.

கல்முனை தமிழ்ப் பிரிவுக்கான துருப்புச் சீட்டை முஸ்லிம் அரசியல்வாதிகள் ஏதோ ஒரு வகையில் வைத்துக் கொண்டே இருக்கிறார்கள். தமிழர் அரசியலில் அரசுடன் தமிழ்ப் பிரதிநிதிகள் இணைவதும், தமிழர்கள் இணைந்து அமைச்சர்களாக இருப்பதும் ஒன்றும் வரலாற்றில் நடக்காத ஒன்றல்ல.

இருக்கும் வரைக்கும் இருப்போம்.. முடிந்தவரைக்கும் உழைப்போம் ஏதோ காலம் கடத்துவோம் என்று வாழும் அரசியல் வாழ்க்கைக்குப் பெயர்ஆளும் கட்சியென்று மகிழ்ச்சி கொள்வோம். தம்மால் முடியாமல் போனதற்கு தமிழ்த் தேசியத் தரப்பு மீது குற்றச்சாட்டுகளை அடுக்குகிறார்களே தவிர வேறு ஒன்றும் நடைபெறவில்லை.

கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் பழம் பெரும் கிராமங்களை உள்ளடக்கிய பிரதேசமாகும். அவ்வாறிருக்கின்ற அந்த எல்லைகளை, கல்முனை தெற்குப் பிரதேச செயலகத்தோடு நிலஅளவை செய்து, கல்முனை வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் மாற்றங்களை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். கிராமங்களின் வீதிகளின் பெயர்கள் மாற்றி அமைக்கப்பட்டு இருக்கின்றன.

தமிழ் மக்களும் சிங்கள மக்களும் வாழ்ந்த பிரதேசம் தற்போது இஸ்லாமாபாத் என மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற நடவடிக்கைகள் கல்முனையில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்ற விடயமாக இருக்கின்றன. நாட்டில் இருக்கின்ற நிருவாக நடைமுறைக்கு மாறாக இப் பிரதேச செயலகப் பிரிவில் மாத்திரம் மோசடி நடைபெறுவதாகவே குற்றம் சாட்டப்படுகிறது.

கிழக்கில், மிகக் குறைவான கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கியதாக பிரதேச செயலாளர் பிரிவுகள் காணப்படுகின்ற போதும், 29 கிராம சேவகர் பிரிவுகளைக்

விடுதலைப் புலிகளின் கிழக்குத் தளபதியாக இருந்து அவ் அமைப்பிலிருந்து பிரிந்து அரசுடன் இணைந்து பிரதி அமைச்சரான கருணா எனும் விநாயகமூர்த்தி முரளிதரன், கல்முனை விடயத்தில் பல உறுதிப்பாடுகளைக் கூறியிருந்தார். ஒன்றும் நடைபெறவில்லை. கடந்த தேர்தலில் கல்முனை தமிழ்ப் பிரிவினைத் தரமுயர்த்துவேன் என்ற தேர்தல் அறை கூவலுடனேயே அவர் போட்டியிட்டார். அவரது இந்த உறுதியை நம்பி வாக்களித்த மக்களுக்கு அம்பாறைக்கு தமிழ்ப் பிரதிநிதித்துவமே இல்லாமல் போனது. அதாவுல்லா நாடாளுமன்ற உறுப்பினராவதற்கும் வழியை ஏற்படுத்திக் கொடுத்தார் கருணா என்கிற முரளிதரன்.



கொண்டுள்ள கல்முனை வடக்கு இன்னும் உப பிரதேச செயலகமாகவே இருந்து வருகிறது. இது அம்பாறை மாவட்ட தமிழ் மக்களை மட்டுமல்ல, கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் அனைவரையும் கவலைக்குள்ளாக்கும் செயலாகும்.

கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம் 1989 இல் சுற்றுலா உதவி அரசாங்க அதிபர் பிரிவாக இயங்கி 1993 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை உப பிரதேச செயலகமாக இயங்குகிறது. காணி, நிதிவளம் அற்றதாக இயங்கும் இப் பிரதேச செயலகத்திற்கு கணக்காளர் நியமிப்பு இதுவரையில் நடைபெறவில்லை.

சாண் ஏற முழம் சறுக்கும் தமிழர் அரசியலில் சாத்தியங்கள் கடந்த நல்லாட்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்புடன் வலுப்பெற்ற வேளையில். நாட்டில் ஏற்பட்ட ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான முரண்பாடு, ஈஸ்ரர் தாக்குதல், பிரதமர் மாற்றம், ஆட்சிக்குழப்பம் உள்ளிட்ட பல பிரச்சனைகள் அதனைக் குழப்பியடித்தது.

ஏற்கனவே 1993 இல் அமைச்சரவை ஒப்புதல் கிடைத்து, அவ்வேளையில் நாட்டில் ஏனைய பகுதிகளில் இருந்த உப பிரதேச செயலகங்கள் பிரதேச செயலகங்களாக தரம் உயர்த்தப்பட்டன. அதற்குப் பின்னர் பல பிரதேச செயலகங்கள் புதிதாக உருவாக்கப்பட்டும் இருக்கின்றன. இவ்வாறான நிலையில் கல்முனை தமிழ்ப்பிரிவு பிரதேச செயலகமே நிறைவு பெறாத ஒன்று.

கல்முனை தமிழ்ப் பிரிவு 35 வருடங்களை தாண்டியும் நிறைவேறாத கனவாகவே இருந்து கொண்டிருக்கிறது. இதனை வைத்தே முஸ்லிம் அரசியல்வாதிகளும், சில தமிழ் அரசியல்வாதிகளும் தேர்தல்களில் போட்டியிடுகிறார்கள். காலத்தையும் கடத்துகிறார்கள். மக்களையும் ஏமாற்றுகிறார்கள்.

ஆனால், யதார்த்தத்தினைச் சொல்வதற்கும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும்தான் ஆட்களில்லை. அந்தவகையில், கல்முனை தமிழ் பிரதேச செயலகம் தொடர்பில் அரசியல் தலைவர்களது நடவடிக்கைகள் தமிழ் - முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை குலைப்பதாகவே அமைந்திருக்கிறது. இனவிரோதம் வலுத்து விட்டது.

அதன் தொடர்ச்சியாகத்தான் கல்முனையில் உருவாகி இருக்கின்ற பிரச்சினைகள் காணப்படுகின்றன. கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கான அதிகாரங்கள் வழங்கப்படாமல் திட்டமிட்டு தடுக்கப்படுவது கவலையானதே. இவ்வாறான சம்வங்களும் இன முறுகல் நிலைகளும் உருவாகாமல் தடுக்க கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கான அதிகாரங்களை வழங்கி மக்கள் தங்கள் சேவைகளை வினைத்திறனாகவும் பாதிப்பின்றியும் பெறுவதற்கு அரசாங்கம் உடனடித் தீர்வைக் காண வேண்டும்.

அடிக்கடி ஒரு பொறி விழுவதும், அது பெருந்தீயாகப் பற்றி எரிவதும் பின்னர் தானாக அணைவது போன்று ஆகிவிடுவதும்தான் தமிழ் மக்களின் நிலைப்பாடு. 'பிட்டும் தேங்காய்ப்பூவும் போல' என்று பொது வெளியில் பேசிக் கொண்டு உள்ளே வேறுவிதமாகச் செயற்படும் பாங்கு கிழக்கில் தமிழ், முஸ்லிம்களுக்கு இடையில் இருக்கிறது என்பது வெளிப்படை. இந்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படவேண்டும் என்பதே அனைவருடையதும் நிலைப்பாடாகும்.

இலங்கையில் இனப்பிரச்சினை உருவான வேளை சிறுபான்மை, தமிழ் என்றிருந்த தமிழ் முஸ்லிம் மக்கள் காலப்போக்கில் பிரிந்து இரு துருவங்களானார்கள். அதன் பின்னர்தான் தமிழ்பேசும் என்று மாற்றம் பெற்றது.

அதற்குப் பல காரணங்கள் சொல்லப்பட்டாலும், இப்போதும் தமிழர் தரப்பு அவற்றையெல்லாம் மறந்து சகோதரர்களாக வாழ்வோம் என்றே சொல்கிறார்கள். முயற்சி செய்கிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீராத நம்பிக்கையாக இருக்கின்ற முஸ்லிம்களின் இணக்கப்பாட்டுடன் கல்முனைத் தமிழ்ப்பிரிவு பற்றிய பிரச்சினை முடிவுக்குவர வேண்டும்.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை வடக்கு - உப பிரதேச செயலகம், முழுமையான பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்படாத காரணத்தினால் அப் பிரதேசத்தில் வாழும் தமிழர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்.

அதே நேரத்தில் இது வெறுமனே கல்முனைத் தமிழர்களின் பிரச்சினை, கிழக்குத் தமிழர்களது பிரச்சினை என்ற மட்டுப்பாடுகளுடன் பார்க்கப்படுவது நிறுத்தப்பட்டு, ஒட்டுமொத்த வடக்கு கிழக்குத் தமிழர்களின் பொதுமையான பிரச்சினையாகப் பார்க்கப்படவும் வேண்டும்.



# அனுரவுக்கு வெற்றி நிச்சயமா?



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் பசில் ராஜபக்ச, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்றத் தேர்தலை முன்வைத்து அரசியல் குட்டையை குழப்புவதற்காக அமெரிக்காவிலிருந்து விமானம் மூலம் நாட்டிற்கு பறந்தார். சர்வதேச நாணய நிதியத்தின் பொருளாதார மீட்சித் திட்டம் நிறைவடைந்த பின்னரே பாராளுமன்றத் தேர்தலை நடத்த முடியும் என்பதால் ஜனாதிபதித் தேர்தலை உரிய நேரத்தில் நடத்துவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியாகத் தோன்றினார். ஜனாதிபதித் தேர்தல் உரிய திகதியில் அதாவது செப்டம்பர் - அக்டோபர் 2024 அன்று நடத்தப்படும் என்று தேர்தல் ஆணையம் உறுதி செய்துள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க 53 வீதமான மக்கள் ஆதரவுடன் முன்னணியில் இருப்பதாக சுகாதாரக் கொள்கைக் கருத்துக் கணிப்பு நிறுவனம் 2024 பெப்ரவரியில் முன்னறிவிப்பு தெரிவிக்கிறது. ஐக்கிய மக்கள் சக்தியின் மற்ற முன்னணியின் நம்பிக்கைக்குரிய சஜித் பிரேமதாச 34 சதவீத ஆதரவைப் பெற்றார். ஐக்கிய தேசியக் கட்சியின் (யூ.என்.பி.) ஜனாதிபதி விக்கிரமசிங்க முன்னறிவிப்பில் 6 சதவீத ஆதரவைத் திரட்ட முடியுமென குறிப்பிடப்பட்டது.

எவ்வாறாயினும், விக்கிரமசிங்க சுயேச்சை வேட்பாளராக போட்டியிடுவார் என தொழிலாளர் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். 'அனைத்து கட்சிகள், இனங்கள் மற்றும்



மதங்களை பிரதிநிதித்துவப் படுத்தும் மக்கள் மற்றும் பலதரப்பட்ட பின்புலங்களைக் கொண்ட மக்கள் ஒன்று கூடும்' ஒரு பொதுவான தளத்தில் ஒரு பரந்த கூட்டணியால் அவர் ஆதரிக்கப்படுவார், அவரை ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்க முடியும். ஜனாதிபதி வேட்பாளர் குறித்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முடிவெடுக்கவில்லை இது முன்னறிவிப்பில் 7 சதவீத ஆதரவை மட்டுமே பெற்றது.

இலங்கையின் கூட்டணி அரசியலானது தேர்தல் முன்னறிவிப்புகளை கெடுக்கும். ஆனால் கொழும்பு இராஜதந்திர சமூகம் பித்தலாட்டவியலாளரின் கணிப்பீட்டின்படி செல்வதாகத் தெரிகிறது. அவர்களில் பலர் அனுரகுமாரவை சந்தித்தனர், ஒருவேளை அவரையும் அவரது கட்சியின் நிலைப்பாட்டையும் பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச பிரச்சினைகளில் புரிந்து கொள்ள வேண்டும்.



ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதில் அதிக நம்பிக்கை வைத்திருப்பதை சுட்டிக்காட்டும் வகையில் சர்வதேச நாணயநிதியப் பிரதிநிதிகளையும் அனுரகுமார சந்தித்துள்ளார். அவரது கூட்டங்களில் வரும் பெருந்திரளான கூட்டத்தால் இது ஒருவேளை வலுப்படுத்தப்படுகிறது. உத்தியோகபூர்வ அழைப்பைப் பெற்ற பின்னரான அனுரகுமாரவின் இந்திய விஜயத்திற்குப் பிறகு அவரது சாதகமான கருத்துகளைப் பார்த்தால் இந்தியா சாதமான பார்வையை கொண்டிருந்தது. அவரது வெளிநாட்டுசுற்றுப்பயணங்களில் கனடா மற்றும் ஐக்கிய இராச்சியம் உள்ளடங்கியிருந்தன. இலங்கை அரசியல் கட்சிகள் பொதுவாக தேர்தலுக்கு புலம்பெயர் நாடுகளின் நிதி உதவியை நாடுகின்றன.

சிங்கள தேசியவாதத்துடன் இடதுசாரி நிகழ்ச்சி நிரலைக் கொண்ட அனுரகுமாரவால் தேசத்தை வழிநடத்துவதற்கு அதற்கு மேல் எழ முடியுமா? குறைந்தபட்சம் அவர் ஒரு முயற்சியை மேற்கொள்கிறார் என்று தோன்றுகிறது. ஆனால், 13 வது திருத்தத்தை முழுமையாக அமுல் படுத்துவது அல்லது பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றிய தொல்லை தரும் கேள்வி போன்ற நீண்ட காலமாக இலங்கை எதிர்நோக்கும் சில கொந்தளிப்பான பிரச்சினைகளை கையாள அனுரகுமார தயாரா?

நிச்சயமாக, நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு அரசியலமைப்பை மீண்டும் எழுதுவது மற்றும் தேர்தல் சீர்திருத்தங்கள் போன்ற இன்னும் சில விஷயங்களை தேசியமாக்கல் சக்தி நிகழ்ச்சி நிரலில் சேர்க்கலாம். முக்கிய அரசியல் கட்சிகள் இந்த விவகாரங்களில் கணிசமான நடவடிக்கை எடுக்காமல், செயற்படுகின்றன. அவரால் மாற்றத்தை ஏற்படுத்த முடியுமா?

தமிழ்ப் பகுதிகளில் அவர் மேற்கொண்ட சுற்றுப்பயணம் மக்களின் 'நாடித் துடிப்பை உணருவதற்காக' இருக்கலாம். இறுதி இலக்குகள் பற்றிக் குழம்பியிருக்கும் தமிழ் அரசியலுக்குக் கூட அச்சுறுத்தலான பணி இது. கடந்த காலத்தைப் பற்றி விவாதிப்பதில் தமிழ்த் தலைவர்கள் தங்கள் நேரத்தைச் செலவிடுகிறார்கள். தமிழ்த் தேசியத்தின் தீபம் ஏற்றியவர் யார் என்று இன்னும் விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எஸ்.ஜே.சி அல்லது வி.பி. இது அவரது தேர்தலுக்குப் பிறகு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழரசுக்கட்சியின் தலைவர் சிறிதரனால் போதுமான அளவு நிரூபிக்கப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ்த் தேசியத்தின் முக்கிய தலைவர்கள் சிலரைக் கொன்ற போதிலும், அவர் விடுதலைப் புலிகளின் தியாகிகளின் நினைவிடத்திற்கு அஞ்சலி செலுத்த விரும்பினார்.

2022 இல் ராஜபக்சக்களுக்கு எதிரான மக்களின் எழுச்சியான அரகலயவின் உரிமையை அனுரகுமார கோரியுள்ளார். அவரது கூற்று முற்றிலும் உண்மையாக இருக்காது. மற்றும் அதன் உச்சரிப்பு சமீப காலங்களில் அடக்கப்பட்டிருக்கலாம். ஆனால் ஜனநாயகத்தை பாதுகாக்க திறமையான ஊழலற்ற அரசியல் தலைமை தேவை என்ற ஆர்வத்தை அரகலய மக்களிடையே தூண்டியுள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கருத்துக் கணிப்பு ஜனநாயக ஆட்சிக் குறியீட்டில் நம்பிக்கை 2024. மார்ச் ரொப்லைன். அறிக்கையின்படி, பதிலளித்த 1350 பேரில் 94 - 95 சதவீதம் பேர் அரசியல் வகுப்பிற்கான பின்வரும் எளிய தேவைகளை ஏற்றுக்கொண்டனர்:

அனைத்து அரசியல்வாதிகளும் தணிக்கை செய்யப்பட்டு அவர்களின் கணக்கில் வராத சொத்துக்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட வேண்டும்.

**சரியான நேரத்தில் தேர்தல் நடத்த வேண்டும்**

ஜனாதிபதி உட்பட அனைத்து அரசியல்வாதிகளும் தமது சொத்துக்களை வெளியிட வேண்டும்.

பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள் பொறுப்பேற்க வேண்டும்.

ஊழலற்ற, திறமையான அரசாங்கத்திற்காக அனுரகுமார அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியுமா?

## திறமையற்ற ஜனாதிபதிகளிடம் இருந்து கற்றுக்கொள்ளல்

அனுரகுமாரவுக்கு அதிர்ஷ்டவசமாக, இரண்டு முன்னாள் ஜனாதிபதிகள் - கோத்தாபய ராஜபக்ச மற்றும் மைத்திரிபால சிறிசேன - அவர்களின் பதவிக்காலத்தில்



திறமையின்மை மற்றும் தவறான நிர்வாகத்தால் ஒரு ஜனாதிபதி எவ்வாறு நடந்து கொள்ளக் கூடாது என்பதற்கான ஆய்வுகளை வழங்குகிறது. அனுரகுமார ஆய்வுகளை மேற்கொள்வது நல்லது. அவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அது ஊழலற்ற நல்லாட்சிக்கு அத்தியாவசியமானவற்றை வழங்க அவருக்கு உதவும். அவை சுருக்கமாக வழங்கப்படுகின்றன.

### கோத்தாபயவின் 'சதி'

அந்த மாதத்தில், கோத்தாபய ராஜபக்ச 'சதி' என்ற புத்தகத்தை வெளியிட்டார். அரகலய எழுச்சி அரசாங்கத்தை மூழ்கடித்த பின்னர் அவர் வெளியேற்றப்பட்டதன் பின்னணியில் வெளிநாட்டு சதித்திட்டத்தின் அவரது பதிப்பு. துரதிர்ஷ்டவசமாக, நான் புத்தகத்தைப் படிக்கவில்லை; எவ்வாறாயினும், புத்தகத்தின் பகுப்பாய்வுகளின் சுருக்கம் ஒரு ஜனாதிபதியாக தனது தோல்வியை கோத்தாபய எவ்வாறு பார்க்கிறார் என்பது பற்றிய சில நுண்ணறிவுகளை வழங்குகிறது.

கோத்தாபயவின் புத்தகம் பற்றிய கருத்தியல் கண்ணோட்டத்தில் கலாநிதி தயான் ஜயதிலகவின் கட்டுரைக்கு நன்றி. நூலில் இருந்து சில மேற்கோள்கள் இங்கே.

கோத்தாபய அரகலய 'அடிப்படையில் சிங்கள மற்றும் பௌத்த விரோத நிறுவனமாக ஆரம்பம் முதல் இறுதி வரை' இருப்பதைக் காண்கிறார். (பக் 172). தப்பெண்ண மனதுடன் எழுதப்பட்ட புத்தகத்தின் மற்ற கற்கள்: நான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதற்கு ஒரு காரணம் சிங்களவர்கள் தங்கள் சொந்த நாட்டில் தமக்கான உரிமையை இழந்துவிட்டார்கள் என்ற உணர்வு... சிங்களவர்களும் குறிப்பாக சிங்கள பௌத்தர்களும் இப்போது மீண்டும் ஒருமுறை அனுகூலமற்ற தன்மை. (போஸ்ட்ஸ்கிரிப்ட், பக் 169-177).



விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து தமிழ்ப் பிரிவினைவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தவராக கருதப்பட்டதால்தான் மக்கள் அவருக்கு வாக்களித்தார்கள் என்பது கோத்தாபயவின் பிறர்மீது நம்பிக்கையில்லாததுடன் அவர்களைக்கண்டு அஞ்சும் போக்கை மூடிமறைக்கிறது.

### இந்தியா மீது சிறிசேனவின் அசாதாரணமான குற்றச்சாட்டு

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவரின் அவதானிப்பில் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் ஐந்தாவது ஆண்டு நினைவு தினத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னர், உயிர்த்த ஞாயிறு படுகொலைகளின் பின்னணியில் இந்தியா இருப்பதாக முன்னாள் அசாதாரணமான குற்றச்சாட்டை முன்வைத்தார்.

செய்தியை வெளியிட்ட தி சண்டே டைம்ஸ் பிரகாரம், முன்னாள் ஜனாதிபதி ஒரு இந்திய இராஜதந்திரி 'தாக்குதல் பற்றி தன்னிடம் ஒப்புக்கொண்டது மட்டுமல்லாமல் காரணத்தையும் ஒப்புக்கொண்டார். இந்தியாவுக்கு எந்தவொரு திட்டங்களையும் வழங்குவதில் இலங்கை அக்கறை காட்டாததே இதற்குக் காரணம்' என்று குறிப்பிட்டிருந்ததாக செய்தி வெளியாகியிருந்தது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் 247 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். மற்றும் 500 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். ஜனாதிபதி சிறிசேனவின் பதவிக்காலத்தின் இயலாமை மற்றும் அலட்சியத்தின் மிக உயர்ந்த விடயங்களில் இதுவும் ஒன்றாகும். பத்து நாட்களுக்கு முன்னதாக இந்திய உளவுத்துறை நிறுவனத்திடமிருந்து வரவிருக்கும் தாக்குதலைப் பற்றிய எச்சரிக்கையை அவர் செயற்படுத்தத் தவறிவிட்டார். தாக்குதலுக்கு சில மணி நேரங்களுக்கு முன்பு கூட வரவிருக்கும் நடவடிக்கை குறித்து முகவரமைப்பு எச்சரித்திருந்தது.

தாக்குதல் தொடர்பான நான்கு கட்ட விசாரணைகள் இருந்தன. அவை அனைத்திலும் சிறிசேன தலையிட்டார். தாக்குதலுக்கு ஒரு வருடத்திற்கு முன்னர், உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சந்தேக நபரான சஹ்ரானின் நடவடிக்கைகள் குறித்து டிஐஜி நாலக டி சில்வாவின் கீழ் உள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவு (டிஐடி) விசாரணை நடத்தியது. டி சில்வா, ஜனாதிபதி சிறிசேனவை கொலை செய்ய முயன்றதாகக் கூறி கைது செய்யப்பட்ட பிறகு, இது பின்பற்றப்படவில்லை.

2018 ஜூனில் இந்திய உளவுத்துறையின் முன்கூட்டிய எச்சரிக்கையின் பேரில் ஒரு ஜனாதிபதி விசாரணைக் குழு தனது அறிக்கையை சமர்ப்பித்ததன் பேரில் தோல்விக்கான செயலை ஆய்வு செய்தது. அறிக்கையின் மீது செயற்படத் தவறியதை அரசாங்கம் ஒப்புக்கொண்டது. தாக்குதல்கள் குறித்து விசாரிப்பதற்காக 2019 மே மாதம் நியமிக்கப்பட்ட 7 பேர் கொண்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவில், தேசிய புலனாய்வுத் தலைவர் சிசிர மெண்டிஸ், வரவிருக்கும் தாக்குதல் குறித்த எச்சரிக்கைகள் குறித்து ஜனாதிபதி சிறிசேன அறிந்திருப்பதாகக் கூறினார்.

ஜனாதிபதி சிறிசேன இந்த கண்டுபிடிப்புகளை ஏற்க மறுத்து, மெண்டிஸை பதவி நீக்கம் செய்தார். கர்தினால் மல்கம் ரஞ்சித் பலமுறை கோரிக்கை விடுத்தும் அதன் கண்டுபிடிப்புகள் ஒருபோதும் செயற் படுத்தப்படவில்லை. படுகொலை தொடர்பான மேலதிக விசாரணைகள், தேசிய தவ்ஹீத் ஜமாத்தின் நிறுவனர் சஹ்ரானின் கீழ் இயங்கிய தற்கொலை குண்டுதாரிகளின் அடையாளத்தை நிறுவியுள்ளது, அவர்கள் ஐஎஸ் பயங்கரவாதிகளுடன் தொடர்பு கொண்டிருந்தனர். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை கையாள்வதில் அலட்சியமாக இருந்தமைக்காக சிறிசேனவை அபராதம் செலுத்துமாறு இலங்கை நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது

தேர்தலுக்கு முன்னதாக இந்தியாவைக் குற்றம் சாட்டும் சிறிசேனாவின் சமீபத்திய நாடகங்கள் இரண்டு அடிப்படைக் கேள்விகளை எழுப்புகின்றன பொய்க் குற்றச்சாட்டின் மூலம் அவர் யாரை முட்டாளாக்கப் பார்க்கிறார்? யார் சார்பாக இந்தியா மீது குற்றம் சாட்டுகிறார்?

கனூஷியா



# மலையகத் தமிழர்களின் நோக்கில் ஜே.வி.பி.

> மலையகத் தமிழர்களை இந்தியாவுக்கு அனுப்ப வேண்டுமென்ற கருத்தைப் பரப்பியவர்கள்..

இலங்கைத்தீவை தொடர்ச்சியாக ஆட்சி செய்த தேசிய கட்சிகள் என கூறப்பட்டு வரும் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அனைத்துமே இனவாதத்தை வைத்து தான் ஆட்சி செய்தன.

எனினும், இவற்றைத் தவிர மார்க்சிய - லெனினிய - மாவோவிய -சேகுவேராக் கொள்கைகளை துல்லியமாகக் கடைப்பிடிக்கிறோம் என கூறிக்கொண்டு வந்த ஜேவிபி என்றழைக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணி, இன்று தேசிய மக்கள் சக்தி எனப் பூசி மெழுகிக் கொண்டு நாட்டை சுற்றி வலம் வருகின்றது.

இந்திய வம்சாவழித் தமிழர்கள் என்று அழைக்கப்படும் மலையகத் தமிழ் மக்களை இந்தியாவின் கைக்கூலிகள் என்று கூறி அவர்களை முற்றிலும் இந்தியாவுக்கே துரத்தி அடித்துவிட வேண்டும் என்ற கொள்கையைப் பரப்பியது ஜேவிபிதான்.

1971 ஆம் ஆண்டு, ஜேவிபி இந்நாட்டு அப்பாவி இளைஞர்களை ஒன்று திரட்டி ‘ஏப்ரல் இளைஞர் கிளர்ச்சி’ என்ற ஒன்றை ஏற்படுத்தி இந்த நாட்டின் ஆட்சியை கைப்பற்ற எத்தனித்த போதும் அது படுதோல்வியில் முடிந்தது. இதனால் ஆயிரக்கணக்கான இளைஞர்களைப் பலி கொடுக்கவும் வேண்டியேற்பட்டது இன்னும் மறையாத வடுவாகவுள்ளது. இலங்கைத் தீவின் மலையகத்திலும் மற்றும் தலைநகர் கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் வாழும் மலையகத் தமிழர்கள் தொடர்பாக ஜேவிபி இன்றுவரை சரியான நிலைப்பாட்டை எடுத்துள்ளதாகக் கூற முடியாது.

மலையகத் தமிழ் மக்கள் தொடர்பாக அன்றைய இளைஞர் மத்தியில் விதைத்த இனவாதம் கொண்ட கருத்துக்கள் இன்றும்கூட இந்த மக்களுக்கு எதிராக சிங்கள மக்கள் மத்தியில் வேரூன்றியுள்ளதை அவதானிக்க முடியும்.

மலையகத் தமிழர்கள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சினைகள், மற்றும் தோட்டங்களிலும் பெருந்தோட்டங்களிலும் பணிபுரியும் மலையகத் தமிழ் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு ஜேவிபியிடம் உரிய பதில் இல்லை.




ஜே. வி. பி பேரணி

## ரோகண விஜயவீர

இலங்கையின் மூன்றாவது தேசியக் கட்சியாக மாறி வரும் மக்கள் விடுதலை முன்னணி, 1965 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதி உருவாக்கப்பட்டது. இலங்கை கம்யூனிட்ஸ் கட்சியின் தலைவரான ரோகண விஜயவீர இதன் ஸ்தாபகர் ஆவார். நாளடைவில் தடை செய்யப்பட்ட கட்சியாக மாறிய போதிலும் இது 1994 ஆம் ஆண்டு முதல் மீளவும் செயற்பட ஆரம்பித்தது.

தற்போது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஜே.வி.பியின் அரசியல் கூட்டணியானது தேசிய மக்கள் சக்தி என பெயர் மாற்றம் செய்து கொண்டு பிரச்சாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

சற்று உற்று நோக்கினால் தேசிய மக்கள் சக்தியின் பின்னணியில் எதுவிதமான ஒரு அரசியல் கூட்டணியும் இல்லை என்பது தெளிவு. ஆரம்பத்தில் ஜேவிபி எனும் பெயரில் இனவாதத்தை தூண்டிய இந்தக் கட்சி தற்போது வடக்கு கிழக்கு தமிழர்கள் பக்கம் திரும்பியுள்ளது.

தமிழ் மக்களுக்கு என்ன தீர்வு வழங்கலாம் என்பதை கூற ஜேவிபி மறுப்பது ஏன்? இவ்வாறான காரணிகளால் ஜேவிபி ஒரு பேரினவாதக் கட்சி என்ற பார்வையே தமிழ் மக்கள் மத்தியில் உண்டு.

வடக்கு, கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக குரல் கொடுப்பது போன்ற தோற்றப்பாட்டை தற்போது காண்பிக்க முற்பட்டு வரும் ஜேவிபி, தேசிய மக்கள் சக்தி என்று புதிய பெயருடன் இயங்க முற்பட்டு வருகின்றது.

## இடதுசாரிகளா?

2005 இல் மகிந்த ராஜபக்சவை ஜனாதிபதியாக்கி பின்னர் அவரைப் போருக்குத் தள்ளியதும் பெயர் மாற்றம் செய்யப்பட்ட இந்த ஜேவிபிதான். 2009 முள்ளிவாய்க்கால் படுகொலைகளுக்கு ஜேவிபியும் பொறுப்புக்கூற வேண்டும்.

ஆரம்பத்தில் இவர்கள் தங்களை இடதுசாரிகள் என்று அழைத்துக் கொண்டாலும் அவர்களது ஒட்டுமொத்தமான கொள்கை, சிங்கள - பௌத்த அதிதீவிர தேசியவாதமாகவே இருந்தது, இருந்து வருகிறது.

அவர்கள், இலங்கையில் வசித்து வரும் இந்திய வம்சாவழித் தொழிலாளர்களைக் காரணமாக வைத்து, இந்தியா தனது ஆக்கிரமிப்பை இலங்கையில் விஸ்தரிக்கின்றது என்று பெரும் குற்றச்சாட்டை இந்தியா மீது சுமத்தினர். அத்துடன் இலங்கையில் வசிக்கின்ற சகல இந்திய வம்சாவழி மக்களையும் இந்தியாவுக்கே துரத்திவிட வேண்டுமென்பதையும் தமது கொள்கைகளில் ஒன்றாகக் கொண்டிருந்தனர்.

> மலையகத் தமிழ் மக்கள் தொடர்பாக அன்றைய இளைஞர் மத்தியில் விதைத்த இனவாதம் கொண்ட கருத்துக்கள் இன்றும்கூட இந்த மக்களுக்கு எதிராக சிங்கள மக்கள் மத்தியில் வேரூன்றியுள்ளதை அவதானிக்க முடியும். மலையகத் தமிழர்கள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சினைகள், மற்றும் தோட்டங்களிலும் பெருந்தோட்டங்களிலும் பணிபுரியும் மலையகத் தமிழ் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு ஜேவிபியிடம் உரிய பதில் இல்லை.



# விக்கிலீக்ஸ் – ஜூலியன் அசாஞ்சே




ஐங்கரன் விக்னேஸ்வரா

# மேற்குலகின் அத்துமீறல்களை வெளிப்படுத்தியவர் ஜூலியன்

> இரகசியம் என்று அரசுகளால் அறிவிக்கப்படும் கோப்புகளிலிருந்து தகவல்களைப் பெற்று வெளியிடும் பத்திரிகையாளர்களின் முயற்சிகளுக்குப் பெரிய தடையாக அமைவது போலியான குற்றச் சாட்டுக்களும் அடக்குமுறைகளுமே. இது, சுயாதீன கருத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்டு, ஜூலியன் அசாஞ்சே நாடு கடத்தப்பட்டால், விசிலூதிகளுக்கு என்ன பாதுகாப்பு என்பதை அலசும் ஆக்கமாகும்.

**2012** களில் உலக அரசியலில் அதிர்வை ஏற்படுத்திய ஜூலியன் அசாஞ்சே அமெரிக்காவிற்கு நாடு கடத்தப்படுவாரா எனும் கேள்விக்கு பிரிட்டிஷ் நீதிமன்றம் கடந்த வாரம் மார்ச் 27 இல் தீர்ப்பு அளித்துள்ளது.

விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சேவுக்கு மரண தண்டனை விதிக்கப்படாது என்று அமெரிக்க அரசு உத்தரவாதம் அளிக்குமா என பிரிட்டிஷ் உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பி உள்ளது. இது குறித்து மூன்று வாரங்களுக்குள் பதில் அளிக்க நீதிபதி டேமி விக்டோரியா ஷார்ப் உத்தரவிட்டுள்ளார்.

மேற்குலகின் அட்டூழியங்களையும், அத்து மீறல்களையும் வெளிப்படுத்தியவர் ஜூலியன் அசாஞ்சே. அவரின் மீதான கைதானது, அமெரிக்க அரசின் செயற்பாடு ஊடக கருத்துச் சுதந்திர மீறலாகவும் கருதப்படலாம்.






ஆயினும் மேற்குலகின் அரச ரகசியங்களை காட்டிக் கொடுத்தவர் என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

ஈராக் போரில் பாக்தாத்தில் அமெரிக்கா நடத்திய வான் தாக்குதலில், ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த நிருபர் கொல்லப்பட்டது உள்பட பல தகவல்கள் ஜூலியன் அசாஞ்சே (Julian Assange) வெளியிட்ட ஆவணங்களில் இருந்தன.

இவற்றில் பல விஷயங்கள் ஆட்சியாளர்களின் அத்துமீறல்களையே வெளிக் கொணர்ந்தன.

இரகசியம் என்று அரசுகளால் அறிவிக்கப்படும் கோப்புகளிலிருந்து தகவல்களைப் பெற்று வெளியிடும் பத்திரிகையாளர்களின் முயற்சிகளுக்குப் பெரிய தடையாக அமைவது போலியான குற்றச் சாட்டுக்களும் அடக்குமுறைகளுமே.

ஜனநாயக விழுமியங்களுக்கும், அரசமைப்புச் சட்டங்களுக்கும் கூட அப்பாற்பட்டு அரசு எனும் அமைப்பை மோசமாகக் கையாளும் ஆட்சியாளர்களை அம்பலப்படுத்தும் ஊடகர்களுக்கு என்ன வகையான சட்டபூர்வப் பாதுகாப்பு உலகில் உள்ளது?

## பாக்தாத்தில் அமெரிக்கா தாக்குதல்:

அமெரிக்க ராணுவம் ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் நடத்திய தாக்குதல் தொடர்பான பல ஆவணங்களை விக்கிலீக்ஸ் இணைய தளத்தில் கடந்த 2010-ம் ஆண்டு வெளியிட்டார் அதன் நிறுவனரான ஜூலியன் அசாஞ்சே. இதனால் உடனடியாக விக்கிலீக்ஸ் மீது குற்ற விசாரணையை அமெரிக்கா தொடங்கியது.

உடனடியாக விக்கிலீக்ஸ் மீது குற்ற விசாரணையை வேறு முனையில் திசை திருப்பி அமெரிக்கா தொடங்கியது. இங்கிலாந்தில் இருந்த ஜூலியன் அசாஞ்சே மீது பாலியல் குற்றச்சாட்டு சுமத்தி, அவருக்கு கைது வாரன்ட்டை சுவீடன் அரசு மூலம் பிறப்பித்தது. இது அமெரிக்காவுக்கு நாடு கடத்தும் முயற்சி என ஜூலியன் அசாஞ்சே குற்றம்சாட்டினர்.

அமெரிக்க வெளியுறவுத் துறை அலுவலகம் மற்றவர்களுடன் வைத்திருந்த தொடர்பு, மின்னஞ்சல் தொடர்பு அனைத்தையும் அசாஞ்சே பொது வெளியில் வெளியிட்டார். இதனால் ஜூலியன் அசாஞ்சே அமெரிக்காவுக்கு விசாரணைக்காக நாடு கடத்தப்படலாம் என பிரிட்டன் அரசு முன்பு தெரிவித்திருந்தது.

ஆயினும் இந்த நீண்ட கால வழக்கில் தோல்வியைச் சந்தித்த ஜூலியன் அசாஞ்சே ஜாமீன் விதிமுறைகளை மீறி, லண்டனில் உள்ள ஈக்குவடார் தூதரகத்தில் கடந்த 2012-ம் ஆண்டு தஞ்சம் அடைந்தார். 2019-ம் ஆண்டு இவருக்கு வழங்கப்பட்ட அடைக்கலத்தை ஈக்குவடார் அரசு வாபஸ் பெற்றது. அதன்பின் ஜூலியன் அசாஞ்சேவை இங்கிலாந்து போலீசார் கைது செய்து லண்டன் சிறையில் அடைத்தனர்.

மேற்குலக அரசுகள் மீது உளவு பார்த்ததாக ஜூலியன் அசாஞ்சே மீது 17 குற்றச்சாட்டுகள் உள்ளதால் அவரை அமெரிக்காவுக்கு நாடு கடத்தும்படி இங்கிலாந்து அதிகாரிகளிடம் அமெரிக்கா கோரிக்கை விடுத்திருந்தது. அமெரிக்க சிறையின் கடுமையான சூழலைச்சந்திப்பது, தன்னைதற்கொலைக்கு தூண்டும் என ஜூலியன் அசாஞ்சே தரப்பில் கூறப்பட்டதால், முதலில் அமெரிக்காவின் கோரிக்கையை லண்டன் நீதிமன்றம் நிராகரித்ததும் அறிந்ததே.

இந்த நிலையில், கடந்தசில மாதங்கள் முன்பாக ஜூலியன் அசாஞ்சே அமெரிக்காவுக்கு விசாரணைக்காக நாடு கடத்தப்பட இருக்கிறார் என்று பிரிட்டன் உள்துறைச் செயலாளர் தெரிவித்திருக்கிறார்.

## அவுஸ்திரேலியாவில் பிறந்தவர்:

அவுஸ்திரேலியாவில் பிறந்தவரான அசாஞ்சே லண்டனில் உள்ள ஈக்வடார் நாட்டு தூதரகத்தில் 2012-ல் தஞ்சம் புகுந்த பின், இராணுவ அரச ரகசியங்களை வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் முதலில் அவரை சுவீடனிலும் பிறகு அமெரிக்காவிலும் விசாரிக்க முற்பட்டனர். பின்னர், சுவீடன் அரசு தனது வழக்கைக் கைவிட்டு விட்டது.

ஜூலியன் அசாஞ்சே கொஞ்சம் கொஞ்சமாக செத்துக் கொண்டிருக்கிறார் என்று அவருடைய வழக்குரைஞர் தெரிவித்திருப்பதும், அவருடைய உடல்நலம் குன்றிக் கொண்டே வருவதும் ஜனநாயகத்துக்காக இப்படிச் செயலாற்றும் விசிலூதிகளின் (Whistle Blowers) பாதுகாப்பு தொடர்பாக தீவிரமான கேள்விகளை எழுப்பியுள்ளது. கூடவே நவீன சமூகத்தின் நாகரிக எல்லைகளின் போதாமையையும் இது சுட்டிக்காட்டுகிறது.

## இங்கிலாந்து உயர் பாதுகாப்பு சிறையில்:

இங்கிலாந்தில் உள்ள உயர் பாதுகாப்புச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் அசாஞ்சே தன்னுடைய ‘விக்கிலீக்ஸ்’ இணையதளத்தின் வழி பல நாடுகளினதும் மோசமான அரசியலாட்டங்களை அம்பலப்படுத்தி உள்ளார். அசாஞ்சே அம்பலப்படுத்திய விவகாரங்கள் 2012 காலகட்டத்தில் உலகெங்கும் பெரும் நாயகப் (Hero) பிம்பத்தை அவருக்கு உருவாக்கியதும் உண்மையே.

அமெரிக்காவின் முகத்திரையை கிழித்துக் காட்டியதால், உடனடியாக சர்வதேச






அழுத்தங்களின் கீழ் கொண்டுவரப்பட்ட அவர், இப்போது பிரிட்டன் சிறையில் அடைக்கப் பட்டிருக்கிறார். தன்னை அமெரிக்கா வசம் ஒப்படைத்து விடக் கூடாது, அது தன் உயிருக்கு ஆபத்து என்று கோரி நீதிப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார் அசாஞ்சே. லண்டன் உயர் நீதிமன்றம் இந்த வழக்கை விசாரித்துவந்தது. அமெரிக்க அரசிடம் அசாஞ்சேவை ஒப்படைத்து விடலாம் என்று ஊகிக்கப்பட்டது.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக பிரிட்டன் உச்ச நீதிமன்றத்தில் அசாஞ்சேவின் வழக்கறிஞர்கள் முறையிட்டனர். இதனிடையே கடுமையான உடல் - மன நலப் பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார் அசாஞ்சே. மேல்முறையீட்டில் ஒருவேளை தோற்று, அமெரிக்காவுக்கு அசாஞ்சே அனுப்பப்பட்டால், அமெரிக்க சட்ட நடைமுறைகளின்படி 175 ஆண்டுகள் வரை அவர் சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடலாம்.

ஐம்பது வயதாகும் அசாஞ்சேவை அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தால் அங்குள்ள சிறைக் கூட நிலைமை காரணமாக அவர் தற்கொலை செய்து கொண்டு விடுவார். மோசமான நிலையில் அவர் இருக்கிறார் என்று அவருடைய சார்பில் வாதிட்டதை முன்னதாக பிரிட்டனின் கீழமை நீதிமன்றம் ஏற்றதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## உலக அரசியலில் அதிர்வலைகளை ஏற்படுத்தியவர்:

உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு வந்தபோது அமெரிக்க அரசு சார்பில் அளிக்கப்பட்ட உறுதிமொழியை அது ஏற்றது. அசாஞ்சேவை தனிமைச் சிறையிலோ, கொலராடோவில் உள்ள சூப்பர்மேக்ஸ் சிறையிலோ அடைக்க மாட்டோம் என்று அமெரிக்க அரசு உறுதியளித்தது.

அத்துடன் வழக்கு விசாரணைக்குப் பிறகு தண்டனையை அவர் அவுஸ்திரேலிய சிறைகளில் கூட அனுபவிக்கட்டும் என்றும் அமெரிக்க அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது. இதன் விளைவாக அமெரிக்கத் தரப்பை ஏற்றுக்கொண்டது நீதிமன்றம். அமெரிக்க அரசு இன்னமும் துரத்திவருகிறது.

'அரச ரகசியம்' என்ற சொல்லாடலின் கீழ் எதையெல்லாம் மக்கள் பார்வையிலிருந்து மறைத்து வைக்க முடியும்? காலனிய கால அணுகுமுறையின் நீட்சியாகவும் கடந்துவந்த நூற்றாண்டுகளின் பார்வையையும் இன்னும் எவ்வளவு காலத்துக்குத் தூக்கிச் சுமக்கப் போகிறோம்?

## நீண்ட சட்டப் போராட்டம்:

இந்த நீண்ட சட்டப் போராட்டம் நீடித்தால் அது அசாஞ்சேவுக்கும் ஆயுளைப் பாதிக்கும் எனும் அச்சம் இப்போது மேலும் அதிகரிக்கிறது. இது சீக்கிரம் தீர்க்கப்பட வேண்டும். முடிவடையாத நீதிமன்ற வழக்குகள் மனதளவில் மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்துகின்றன என்று அசாஞ்சேவின் ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

உண்மையை வெளிக் கொணர்ந்தற்காக எதிர்கொள்ளும் சித்திரவதையானது எவரையும் மனச் சிதைவுக்கு ஆளாக்கிவிடும்.




அசாஞ்சேவுக்கு ஏற்படும் எந்த ஆபத்தும் ஊடக ஜனநாயகத்துக்கான இழிவாகவே அமையும். பத்திரிகையாளராக அவரது பணியைதான் செய்தார். தனது பணியை செய்தற்காக அவர் தண்டனை அனுபவித்து வருகிறார் என்பது கண்கூடு.

ஊடகர்கள் நவீன சமூக முன்னேற்ற செயல்பாட்டின் முக்கியமான அங்கங்கள் ஆவர். அவர்களுடைய உயிர்ப்பான செயல்பாடு ஜனநாயகத்துக்கு முக்கியம். எவ்வாறாயினும் அசாஞ்சே சட்ட ரீதியாக விடுவிக்கப்பட வேண்டும் என்பதே பத்திரிகையாளர்களின் அவாவாகும்.







கா.சுகன்யா

# வட, கிழக்கில் பொருளாதார நெருக்கடி; நுண்நிதிச் செயற்பாடுகளும் பெண்களும்

இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியின் சுமைகள் ஒவ்வொரு குடும்பத்தின் மீதும் மற்றும் பெண்களின் மீதும் சுமத்தப்பட்டுள்ளன. இந்த சூழ்நிலையில் கடனைப் பெறுவது பெண்கள் தமது நிதித் தேவையை சமாளிக்கும் ஒரு வழியாக இருக்கின்றது. இது மேலும் அவர்கள் சுரண்டப்படுவதற்கும், உடமையிழப்பிற்கு ஆளாவதற்கும் வழிவகுக்கின்றது.

யுத்தத்திற்குப் பின்னரான வடக்கு மற்றும் கிழக்கில் நுண்கடன் ஒரு முக்கிய பிரச்சினையாகப் பரிணாமித்தது. 2018 இல் நுண்கடன் நிறுவனங்களின் செயற்பாடுகளை குறைக்க சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கொவிட் காலத்தில் கடன் மீளச்செலுத்தும் கால அவகாசங்களும் நீடிக்கப்பட்டன.

எனினும், தற்போதைய பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினால் நுண்நிதிக் கடன்கள் மற்றும் குடும்பக் கடன்கள் அதிகரிப்பதை மீண்டும் அவதானிக்க முடிகின்றது. அன்று நுண்கடன் நிதி நிறுவனங்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் தற்காலிக தீர்வையே கொடுத்திருந்தன. தற்போது நாம் எதிர்கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடியுடன் ஏற்பட்டுள்ள நீண்டகாலத் தாக்கம் வித்தியாசமானதும் புதிரானதுமான சூழலை உருவாக்கியுள்ளது.



## நுண்நிதிச் செயற்பாடுகள்.

நுண்நிதி நிறுவனங்கள் முன்பைவிட மிகவும் துரிதமாக தமது கடன் வழங்கலைச் செய்கின்றன. குறிப்பாக தனியார் நிதி நிறுவனங்கள் 'ஒன்லைன் கடன்கள்' என்ற புதிய பரிமாணத்தைப் பெற்று, சமூக வலைத் தளங்களிற்கூடாக மிகக் குறைந்த நேரத்தில் கடன்களை வழங்குகின்றன.

அது தவிர நாட் கடன்கள், கிழமைக் கடன்கள் மற்றும் மாதக் கடன்கள் என வீடு தேடி வந்து நுண்நிதி நிறுவனங்களால் கடன்கள் வழங்கப்படுகின்றன. சிறு வாழ்வாதார முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர்களால் நாள் வட்டிக் கடன்கள் போன்றவையும் பெறப்படுகின்றன. மேலும், உள்ளூர் கடைகளில் கடனிற்கு உணவுப் பொருட்களை கொள்வனவு செய்தல், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு கூடாக உருவாக்கப்பட்ட சிறு குழுக்கள், நிதிக் கூட்டுறவு அமைப்புக்கள் மற்றும் சமுர்த்தி போன்றவற்றிலும் கடன்களைப் பெறுகின்றார்கள்.

கடன்களை மீளச் செலுத்துவதற்கு மீண்டும் கடன்களைப் பெறுவதும், அதற்காக வாரத்தில் பாதி நாட்கள் குழுக் கூட்டங்களுக்குச் செல்வதும் கிராமங்களிலுள்ள பெண்களின் வாழ்வியலாகவும் மாறியுள்ளது. வாராந்தம் சிறு குழுக் கூட்டங்களில் பங்கேற்பதிலும் சேமிப்பு செய்வதிலும் ஆர்வம் காட்டுகிறார்கள்.

ஏனெனில், சேமிப்பு மற்றும் ஒழுங்கான வரவு என்பவற்றுக்கூடாக மட்டுமே அவசர தேவைகளுக்கு உடனடியாக ஓரளவு பெரிய கடன்களைப் பெறத் தகுதியானவர்களாக




தம்மை உறுதிப்படுத்த முடியும். ஆனால், அவர்கள் தமது வருமானத்தின் ஒரு பகுதியை சேமிப்பதை விட, சிறு கடன்களைப் பெற்றே சேமிப்புக்களைச் செய்ய முடிகின்றது.

பெரிய நிதித் தொகையாக தேவைப்படும் போது நுண்நிதி நிறுவனங்களின் கடன்களை அதிகூடிய வட்டிவீதங்களில் பெறுகின்றார்கள். இக்கடன்களை மீளச்செலுத்துவதற்கு குறைந்த வட்டி வீதத்தில் கடன்களை வழங்கும் சமூக நிறுவனங்களிடமிருந்து (கூட்டுறவுகள், மகளிர் சங்கங்கள், கிராமிய அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் சமுர்த்தி) கடன்களைப் பெறுகின்றார்கள். இவ்வகையாக, நெருக்கடியின் மத்தியில் நுண்நிதிச் செயற்பாடுகளினால் பெண்கள் மீளமுடியாத கடன்பொறிக்குள் தள்ளப்படும் அபாயநிலை உருவாகியுள்ளது.

## குடும்பக் கடன்களின் நிலை

நெருக்கடிக்கு முன் வாழ்வாதாரத்திற்காக குறிப்பாக கால்நடை வளர்ப்புக்காக கடன்களை பெற்றவர்கள், தற்போது தீவனம் உட்பட பராமரிக்கும் செலவுகள் அதிகரித்துள்ளதால், வாழ்வாதாரச் செயற்பாடுகளை நிறுத்தி கால்நடைகளை விற்கின்றனர். வருமானங்கள் குறைவடைந்ததால் வாழ்வாதாரத்தை தொடர மேலும் கடன் வாங்கத் தயங்குகின்றனர். விவசாய மற்றும் வீட்டு உபகரணங்கள் உட்பட சிறிய சொத்துக்களை வைத்திருப்பவர்கள் அவற்றை அடகு வைத்து அல்லது விற்று விடுகின்றார்கள். இவ்வகையாக வாழ்வாதார இழப்புக்களும், உடைமையிழப்புகளும் அதிகரிப்பதால் மக்கள் மேலும் கடன்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இப்போது கடன் பெறுபவர்கள் அதை வாழ்வாதாரத்தைப் பலப்படுத்துவதற்காக கடன்களைப் பெறவில்லை, அவர்களின் வாழ்வாதாரமே கடன்கள் தான்.

மக்களின் நிதித் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது - இது வெறுமனே அவர்களின் ஆடம்பர செலவுகளால் அதிகரிக்கப் படவில்லை. மாறாக தற்போது நிலவும் அதிகூடிய வாழ்க்கைச் செலவினால் அடிப்படைத் தேவைகளை சராசரிக்கும் குறைவாக பூர்த்திசெய்யும் போது கூட அதிகரிக்கின்றது.

பெண்கள் தங்கள் உணவு முறைகளை மாற்றி, உட்கொள்ளும் உணவின் அளவைக் குறைத்த பிறகும் தங்கள் குடும்பங்களுக்கு உணவளிக்க நுண் கடன்களை நம்புகின்றனர்.

கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குப் போதுமான வருமானத்தை பெறமாட்டார்கள் என்பதை நன்கு அறிந்தே கடனைப் பெறுகின்றார்கள் - இது பசியைத் தடுப்பதற்கான ஒரு குருட்டு நம்பிக்கையுடனான சமாளிப்பு முறையாகும்.

மக்களுக்கு கடன் வட்டி வீதங்கள் மற்றும் குடும்ப வரவு - செலவு பற்றிய சரியான புரிதல் இல்லாததால் அவர்கள் கடன்பொறிக்குள் சிக்கவில்லை. ஆபத்தானதென தெரிந்தும் வாழ்வதற்கு வேறு வழியில்லாததாலேயே சிக்குகின்றார்கள். இது விரைவில் மற்றொரு குடும்பக்கடன் நெருக்கடியை உருவாக்கப் போகின்றது.

நெருக்கடியை எதிர்நோக்கும் பெண்களுக்கு அரசு எந்த நிவாரணமும் வழங்கவில்லை. மாறாக, சர்வதேச நாணய நிதியமும் ஜனாதிபதியும் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தியதற்காக தங்களை வாழ்த்திக் கொள்கின்றனர். அவர்கள் வளர்ந்துவரும் குடும்பக் கடன் நெருக்கடியைக் கண்டும் பாராமுகமாக இருக்கின்றார்கள்.

## கடன்படு நிலை ஏன் உருவாகியுள்ளது?

அரச திட்டங்கள் மற்றும் கொள்கைகளிலுள்ள குறைபாடுகளால் ஏற்பட்ட நெருக்கடிகள் மற்றும் அந்த நெருக்கடிகளில் இருந்து வெளி வருவதற்கான தீர்வுகள் சாதாரண




> நுண்நிதி எனும் கருத்தை மறுபரிசீலனை செய்து அது பெண்களை வலுவூட்டுகின்றது என்ற கட்டுக்கதையை உடைக்க வேண்டியுள்ளது. பொருளாதார நெருக்கடியின் சுமையை பெண்கள் மேல் சுமத்துவதை தவிர்க்க வேண்டும். மாறாக, உணவுப் பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம் போன்ற சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் கிராமியப் பொருளாதாரத்தை வலுப்படுத்தத் தேவையான முதலீடுகளை வழங்க அரசாங்கம் மீண்டும் பொறுப்பேற்க வேண்டும்.



மக்கள் தலைகள் மீது சுமத்தப்பட்டுள்ளன. குறிப்பாக அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ள மறைமுக வரி மற்றும் மின்சார வரி அதிகரிப்புக்கள் மக்கள் மீது பாரிய சுமையாக மாறியுள்ளது. ஆனால், மக்களால் செலுத்தப்படும் வரிகளுக்கான அடிப்படையான சேவைகளான உணவுப் பாதுகாப்பு, கல்வி மற்றும் சுகாதாரம் போன்றவற்றை முன்பிருந்ததை விட அரசாங்கம் மட்டுப்படுத்த எத்தனிப்பது மிகவும் வேடிக்கையானதும் வேதனையானதுமான விடயமாகும்.

ஏற்கனவே வருமானங்களை இழந்து போயிருந்த மக்கள் மீது புதிதாக ஏற்றப்பட்ட சுமைகள் நிதிப் புழக்கத்திற்கான தேவையை மேலும் அதிகரிக்கிறது. இவ்வாறு அதிகரிக்கும் தேவைகளை அணுகுவதற்கு தமது சிறிய சொத்துகளை அடகு வைத்தல், விற்றல் அல்லது கடன்களைப் பெறுதல் போன்றனவே வழிகளாக இருக்கின்றன.

மக்களின் இந்தத் தேவைப்பாடுகளை வாய்ப்பாகப் பயன்படுத்தி நிதி நிறுவனங்கள் ஒவ்வொரு மட்டத்திலும் உள்ள குடிமக்களை இலக்குவைத்து கடன் வலைகளை வீசி வருகின்றன.

இந்த நிலைமை உருவாகுவதற்கு கடனை மையமாகக் கொண்ட நீண்டகால பொருளாதாரக் கொள்கைகளும் காரணமாகும். கடந்த காலத்தில் மக்கள் கடன்பொறிக்குள் சிக்கியதற்குக் காரணம் அவர்களின் ஆடம்பரச் செலவுகளும், நிதி அறிவு இல்லாததுமே என்று அமைப்புகள் குற்றம்சாட்டின. தற்போது அந்த அமைப்புகள் அரசு பெற்ற கடன்களை மீளச் செலுத்துவதற்காகவே மக்கள் கடன்பொறிக்குள் சிக்குகிறார்கள் என்ற உண்மையையாவது ஏற்றுக்கொள்வார்களா?

## மாற்றுத் தீர்வுகள்

கடந்த காலத்தில் நுண்நிதி நிறுவனங்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுள் வட்டிவீதக் கட்டுப்பாடு, கடன் மன்னிப்பு மற்றும் கடன்களை கட்டுவதற்கான கால அவகாசம் போன்றன முக்கியமாக இருந்தன.

மேலும், பெண்கள் சிறு குழுக்களாக இணைவதற்கு ஊடாக வாராந்தம் சேமிப்புகளை செய்து, தேவைப்படும்போது மிகவும் இலகுவாக கடன்களை பெறும் செயற்பாடு, நியாயமான வட்டி வீதத்திலான கடன் அணுகலை விரிவுபடுத்தும் செயற்பாடுகள் என்பன மக்களை நுண்கடன் பொறிகளிலிருந்து வெளியே கொண்டு வருவதற்கு முன்னெடுக்கப்பட்ட தீர்வுகளாகும். ஆனால், அத்தீர்வுகள் மக்கள் பாரிய பொருளாதார அதிர்ச்சியினால் மீண்டும் கடன்பொறிக்குள் சிக்குவதை முற்றிலுமாகத் தடுக்க முடியவில்லை.

இந்தச் சூழ்நிலையில், அரசினால் முன்வைக்கப்பட்டுள்ள நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டமூலம் உண்மையான கடன் பிரச்சனைக்கு தீர்வு காணுமா? கடன் தேவைகள் அதிகரித்துக் கொண்டு செல்வதற்கான காரணங்கள் என்ன என்பதை விளங்கி அவற்றிற்கு மாற்றுத் தீர்வுகளைத் தேடாமல், தொடர்ந்தும் கடன்களைப் பெறுவதற்கான ஒழுங்கமைப்புகளையே நாம் தேடிக்கொண்டு இருக்கப் போகின்றோமா?


கடந்த ஐந்து தசாப்தங்களாக நிலவிவரும் கிராமியப் பொருளாதாரத்தின் நிதிமயமாக்கல் மற்றும் பெண்களின் உழைப்பையும், உடைமைகளையும் சுரண்டும் நுண்நிதித் திட்டம் ஒரு பாரிய நெருக்கடியின் மத்தியில் பொருத்தமில்லாமல் போகின்றது.


நுண்நிதி எனும் கருத்தை மறுபரிசீலனை செய்து அது பெண்களை வலுவூட்டுகின்றது என்ற கட்டுக்கதையை உடைக்க வேண்டியுள்ளது. பொருளாதார நெருக்கடியின் சுமையை பெண்கள் மேல் சுமத்துவதை தவிர்க்க வேண்டும். மாறாக, உணவுப் பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம் போன்ற சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் கிராமியப் பொருளாதாரத்தை வலுப்படுத்தத் தேவையான முதலீடுகளை வழங்க அரசாங்கம் மீண்டும் பொறுப்பேற்க வேண்டும்.



> பெண்கள் தங்கள் உணவு முறைகளை மாற்றி, உட்கொள்ளும் உணவின் அளவைக் குறைத்த பிறகும் தங்கள் குடும்பங்களுக்கு உணவளிக்க நுண்கடன்களை நம்புகின்றனர். கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குப் போதுமான வருமானத்தை பெறமாட்டார்கள் என்பதை நன்கு அறிந்தே கடனைப் பெறுகின்றார்கள் - இது பசியைத் தடுப்பதற்கான ஒரு குருட்டு நம்பிக்கையுடனான சமாளிப்பு முறையாகும்.


# டாக்டர் ப.விக்கினேஸ்வரா










## ஈராண்டு நினைவாக நூல் வெளியீடு




டாக்டர் விக்கினேஸ்வராவின் ஈராண்டு நினைவாக ‘கலாநிதி த.கலாமணி அணிந்துரைகள்’ எனும் நூல் தற்போது ஈழத்தில் வெளிவருகிறது.

சுன்னாகம் புகழ் டாக்டர் ப. விக்கினேஸ்வரா மண் பயனுறச் சேவை நல்கிய மக்கள் மருத்துவர் ஆவார். இடர்காலத்தில் அவர் நல்கிய மருத்துவப் பணிகளை யாழ்ப்பாணம் மண்ணும், மக்களும் என்றும் நினைவில் கொள்வர்.

சுன்னாகத்தில்நாற்பதுஆண்டுகள் மருத்துவ பணியாற்றிய வைத்தியர் ப.விக்கினேஸ்வராஅவர்கள் அமரராகி (22/2/22) இரு வருடங்களாகின்றன. ஆனால் அவரிடம் சிகிச்சைபெற்ற மக்கள் இன்றும் அவரது திறமைகளையும், சேவைகளையும் புகழ்ந்து நினைவு கூருகின்றனர்.





ஜீவநதி பதிப்பகத்தின் 332 ஆவது வெளியீடாக, பிரபல வைத்தியரும் இடர்காலத்தில் மண் பயனுறச் சேவை நல்கிய மக்கள் மருத்துவருமான சுன்னாகம் டாக்டர் விக்கினேஸ்வரா அவர்களின் ஈராண்டு நினைவாக, ‘கலாநிதி த.கலாமணி அணிந்துரைகள்’ வெளிவருகின்றது.

ஒவ்வொரு வருடமும் டாக்டர் ப.விக்கினேஸ்வரா நினைவாக ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள் வெளியிடப்பட்டு வருகின்றமை அறிந்ததே. 2022 இல் மறைந்த டாக்டர் ப.விக்கினேஸ்வராவின் 31ம் நாள் நினைவாக பேராசிரியர் பாலசுகுமார் எழுதிய ‘ஈழத்தில் மாட்டு வண்டிச் சவாரியும் தமிழர் மரபும்’ எனும் நூல் வெளியானது.

இதன்பின் கடந்த வருடம் 2023 இல் டாக்டர் ப.விக்கினேஸ்வராவின் முதலாவது ஆண்டு நினைவாக ஈழத்தின் பிரபல்ய எழுத்தாளர் தீபச்செல்வன் எழுதிய ‘பள்ளிக் கூடங்கள் கட்டடக் கூடுகள் அல்ல’ எனும் கல்வியியல் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியிடப்பட்டது.

இவ்வருடம் டாக்டர் விக்கினேஸ்வரா ஈராண்டு நினைவாக கலாநிதி த.கலாமணி அவர்களால் எழுதப்பெற்ற 35 படைப்பாளர்களின் நூல்களுக்கான அணிந்துரைகளின் தொகுப்பு நூலான ‘கலாநிதி த.கலாமணி அணிந்துரைகள்’ எனும் நூல் தற்போது வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முதிர் கன்னி



அபி

வாழ்வில் வசந்தங்கள்
வருமென காத்திருந்த
முதிர் கன்னிகளில்
நானும் ஒருத்தி!

இலையுதிர் காலம் போல
என் இளமைக் கனவுகள்
எல்லாம்
கலைந்து போயின!

மனசு
மரத்துப் போனது
மற்றவர் பேசும்
வார்த்தை கேட்டு!

மரணத்தை தேடு என
மனம் சொல்கிறது.
முதிர் கன்னியாக யார்
காரணம்.?

புரையோடிப் போன
சமுதாயப் பார்வைகள்
கறுப்பென்றும்..
அழகுகென்றும்
பணமென்றும்,
சாதியென்றும்
நடத்தையென்றும்
ஆயிரம் குறை சொல்லும்!!

மனதில் குறையின்றி
மனம் போல
வாழ்க்கையை
வாழ நினைத்தால்?
சமுதாய சாக்கடை
ஆயிரம் குறை சொல்லி
வந்தவரை அனுப்பி விடும்.

சிவப்புத் தோலுக்கும்
சீர் வரிசைக்கும்
சீக்கிரம் தலையாட்டி
திருமணம் முடிந்துவிடும்!

வாழ்க்கைத் துணை
வருமென வழிபார்த்திருந்த
பல
பேதைப் பெண்கள்
முதிர் கன்னியராக
மூலையில் முடங்கி
வாழ்ந்திடல்
தேவையாகிப் போனதால்
முதிர் கன்னிகள் வரிசையில்
இதோ நானும்!



பவானி

# இடப்பெயர்வும் நானும்

## பாகம்: 03

எங்கள் பயணம் நெடியதாக இருந்தது. நாங்கள் ஊர்ந்து ஊர்ந்து ஒருவாறாக மூங்கிலாறை அடைந்தோம். பிரதான பாதையிலிருந்து விலகி ஒரு மண் பாதையூடாக சென்று கொண்டிருந்தோம். ஏற்கனவே நான் மிதிவண்டியில் சென்று இடம் பார்த்திருந்தேன். காணி உரிமையாளரிடம் சென்று நான் இடம் கேட்ட போது கணவனும், மனைவியுமாக ஒருமித்த குரலில் 'வாருங்கள்' என்றார்கள்.

அவர்கள் திருகோணமலையை சேர்ந்தவர்கள். அவரது பெயர் குமார். இன்று இக்கதையை கூறும் போது அவரையும் அவர் மனைவியையும் நன்றியுடன் நினைவு கூருகின்றேன். இன்று அவர்களைப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆனால், அன்றைய சூழலில் அவர் செய்த உதவியை நான் என்றும் மறக்க மாட்டேன்.

சரி! நாம் குண்டும் குழியுமாக, ஈரலிப்பாக காணப்பட்ட பாதையூடாக சென்று கொண்டிருந்தோம். பாதை ஏற்கனவே மிகவும் சேறாக இருந்தது. நேரமோ இரவு ஒன்பது மணிக்கு மேல் இருக்கும். நான் பார்த்து வைத்த காணிக்கு செல்ல ஒரு கிலோமீற்றர் தூரம் இருக்கும். பாவிகள் போகும் இடம் பள்ளமும் திட்டியுமாக இருக்கும் என்பார்களே! அதுபோல நாங்கள் போன உழவு இயந்திரம் சேற்றில் புதைந்து விட்டது. தள்ளவும் முடியாது. அந்த நேரத்தில் யாரிடம் உதவி கேட்க முடியும்?

அண்ணாவும் திரும்ப வட்டக்கச்சி போக வேண்டும். நான் அவரிடம் 'கிட்ட வந்திட்டம். இதுல பொருட்களை இறக்கி வைத்திட்டு நீங்க போங்கண்ணா' என்றேன். அவரோ முதலில் எப்படி எங்களை தனிய விட்டு விட்டுப் போவது என்று யோசித்தார். எனக்கு சூழ்நிலையின் தன்மை புரிய, அவரை வற்புறுத்தி எல்லாவற்றையும் இறக்கி, ஒரு கரையில் வைத்து விட்டு, உழவு இயந்திரத்தை எடுக்க அது மெதுவாக நகர்ந்து ஓடத் தொடங்கியது.

அண்ணா என்னிடம் பயமில்லையா?' என்று கேட்டார். நான் நீங்க போங்க. விடியட்டும். நான் பார்க்கிறேன் என்றேன். அரைமனதுடன் எங்களை விட்டு விட்டுச் சென்றார் அவர். நிலம் சேறும் சகதியுமாக இருந்தது. நான் கொண்டு வந்து இறக்கி வைத்த மேசையில் இருவரையும் படுக்க விட்டு நானும் மேசையில் அமர்ந்து கொண்டு தூங்காமல் விழித்திருந்தேன். பிள்ளைகள் 'அம்மா பசிக்குது! என்றார்கள். அட! என்னுடைய யோசனையில் அவர்கள் பசியை மறந்து போனேன். பாணும் வாழைப் பழம் கொடுத்தேன். சாப்பிட்டுவிட்டு படுத்து உறங்கி விட்டார்கள்.

யார்முன்னும் உடைந்து அழுதுவிடக் கூடாது என்ற வைராக்கியம் சிதற, என்னுடைய நிலையை எண்ணி கண்ணீர் கன்னங்களில் வழிந்தது. சத்தமாக அழுதால், பிள்ளைகள் அழுவார்கள். இருவரும் உறங்கி விட்டார்கள். குடும்பம் எனக்கு சுமையாக எப்போதும் தோன்றியதில்லை. ஆனால் இந்த நெருக்கடியான சூழலில், கணவர் அருகில் இருந்திருந்தால் எவ்வளவு ஆறுதலாக, அரவணைப்பாக இருந்திருக்கும் என்று மனம் ஏங்கியது.

இல்லை என்று தெரிந்த பின் அதற்காக ஏங்குவது தானே மனித இயல்பு. இந்த இடப்பெயர்வு சூழலில் தனி ஒரு ஆளாக நடப்பது என்பது பெரிய பிரயத்தனம்? சிந்தனையுடன் நிமிர்ந்து பார்த்தபோது கரிய இருளின் மத்தியில் வானில் ஆங்காங்கே கண் சிமிட்டிய நட்சத்திரங்கள் 'காலம் இப்படியே இருக்காது' எனக் கூறுவது போல இருந்தது.

விடிந்து விட்டது. நான் பார்த்த காணி சுமார் அரை கிலோமீற்றர் தூரத்தில் இருந்தது. காணிக்கார தம்பியினதும் வேறு சிலரதும் உதவியுடன் பொருட்களை தூக்கிச் சென்றோம். அங்கு என்னோடு வேலை செய்த தம்பியும் (அன்ரன்) அதே காணியில்



இருந்தார். அவரது உறவினர்களும் எனக்கு பக்க பலமாக இருந்தார்கள்.

கொட்டில் போடவும் மலசல கூடம் அமைக்கவும் எனக்கு உதவினார்கள். இவர்களுடன் அக்காவின் மகனும் துளசியும் உதவி செய்தான். ஒருவாறாக தரப்பாள் கொட்டில் போட்டு, அதனுள்ளேயே இரண்டு அடி ஆழம் கொண்ட 5x2 கிடங்கு வெட்டினேன். அதற்கு மேல் வெட்ட இயலவில்லை. பின் உரப்பை மிகவும் தட்டுப்பாடான காரணத்தால் சேலையை வெட்டி தலையணை உறையாக தைத்து மண் நிரப்பி மூடையாக்கி கிடங்கை சுற்றி ஒரு அடுக்கு அடுக்கி விட்டேன்.

நான் பிள்ளைகளுடன் நிற்கப் போவதில்லை. வேலைக்கு செல்ல வேண்டும். நிவாரணங்கள் கொடுக்க வேண்டும். இதனால், பிள்ளைகளிடம் எப்போதும் இதற்குள் இருந்து விளையாடும் படி காலையில் போக முன் சொல்லி விட்டு செல்வேன். அந்தக் காணி உரிமையாளரும் நல்லவர் என்பதால் அக்கா! நீங்க போங்க. நாங்க பார்க்கிறோம் என்பார்.

என்னதான் எத்தனை பேர் சொன்னாலும் எங்கே கிபிர் அடிப்பான், எங்கே எறிகணை வரும் என்று தெரியாத சூழலில் பிள்ளைகளை விட்டுச் செல்லும் போது மனசு வலிக்கத்தான் செய்யும். இப்படியே ஒரு இயந்திரத்தனமான வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது. ஒருநாள் இரவு பயங்கரமான எறிகணைகள் பரவலாக விழுந்து வெடிக்க தொடங்கின. விடிந்தால்தான் தெரியும் சேத விபரங்கள், எத்தனை பேர் இல்லையென்பது என எண்ணியபடி உறங்கிப் போனேன்.

விடிந்தது. வழமை போல எனது மிதி வண்டியில் சென்று கொண்டிருந்தேன். எங்கும் ஒரே அமைதியாகக் காணப்பட்டது. வழமைக்கு மாறாக மனதுக்குள் இனம்புரியாத ஒரு உணர்வு. மண் பாதையிலிருந்து தார்ப் பாதைக்கு திரும்பிய கணம் என் உயிரே என் வசம் இல்லை. மிகவும் அதிர்ச்சியாகிப் போனேன்.

எனது மிதிவண்டி எப்படி என் வேலையிடத்துக்கு போனது என்றே தெரியவில்லை. எனது பேயறைந்த முகத்தைப் பார்த்த சக பணியாளர்கள் என்ன என்று கேட்க, எனக்கு கூறுவதற்கு வார்த்தைகள் வரவில்லை. நான் கண்ட அந்தக் காட்சி எத்தனை இரவுகள் என் தூக்கத்தை தொலைத்து நிம்மதியின்றி கண்ணீர் விட்டிருப்பேன்? இப்போதுகூட என் நெஞ்சம் நடுங்கிறது.

உழவு இயந்திரப் பெட்டி ஒன்று பாதி எரிந்த நிலையில், அதனுள் கருகிய நிலையில் சில உடலங்களும், பாதி உருகிய நிலையில் கிடாரமும் நெற்களும் காணப்பட்டன. ஐயோ கடவுளே! என்னால் தாங்க முடியவில்லை. பார்த்த கணம் தொட்டு இன்று வரை அதை நினைக்கும் போது மனதில் இனம்புரியாத வலியும் வேதனையும் வருகிறது.

அந்தக் கணம் அந்த நிமிடம் என் மனம் பட்ட வேதனை யாரோ எவரோ தெரியாது. சிறிது நேரத்தில் அந்த இடம் எதுவும் நடவாத இடம்போல காட்சி தந்தது. போரில் பாவிக்க கூடாத இரசாயன குண்டான 'நேபாம் குண்டு' பாவிக்க பட்டதாக பின்னர் அறிந்தோம்.

ஒவ்வொரு நாளும் எறிகணை, கிபிர் தாக்குதலில் பலநூறு பொதுமக்கள் காயப்பட்டும் கொல்லப் பட்டும் போனார்கள். இந்தக் கால கட்டத்தில் உறவினர்களால் தங்கள் உறவுகளை அடக்கம் செய்யக் கூடியவாறான நிலை இருந்தது. இவ்வாறாக சில நாட்கள் நகர, என் வாழ்விலும் என்னால் மறக்க முடியாத நிகழ்வு ஒன்று நடந்தது.

நான் கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றியமையால் நான் வேலைக்குச் செல்ல வேண்டியது தவிர்க்க முடியாத ஒன்றே. அத்தியாவசியப் பொருட்களை நிவாரணமாக வழங்கிக் கொண்டிருந்தோம் நாம். எப்படி எங்கு போனாலும் எனக்கோ பிள்ளைகள் நினைவாகவே இருக்கும். அவர்களை தனியே விட்டு விட்டு வேலைக்கு வரும்போது, எனக்கு இனம் புரியாத வலி மனதில் வரும்.

எனக்கு என்ன நடந்தாலும் பிள்ளைகள் அனாதையாகி விடுவார்கள். அவர்களுக்கு ஏதும் நடந்தால் நான் வாழ்வதில் அர்த்தம் இல்லை. வழமை போல கவனம்! கவனம்! வெளியே போகாதீங்க! வீட்டுக்குள் இருக்கும் பதுங்கு குழியில் இருந்து விளையாடுங்கோ! என்று கூறிவிட்டு வேலை இடத்திற்கு சென்று விட்டேன்.

வழமைபோல் நிவாரணம் வழங்கியபடி இருந்தோம்.அப்போது எம்மைத் தாண்டி சென்று எறிகணை விழுந்து வெடித்தது. நாம் எம் அனுபவத்தில் என்ன எறிகணை? எவ்வளவு தூரம் போகிறது? என கணக்கிட்டுக் கொள்வோம். அன்று எங்கள் வீட்டுப் பக்கம் விழப்போவதாக எனக்குப் பட்டது. நான் உடனே வீட்டை போகப் போறேன். பிள்ளைகள் தனிய இருக்கிறார்கள்.





கடவுளே!! என்ன நடக்குதோ தெரியாது எனக் கூறிப் புறப் பட்டேன். ஆனாலும், எம் சங்கத் தலைவர் எறிகணை வீச்சு தொடங்கி விட்டது. விழுந்து நின்றதும் போகுமாறு கூறினார். பிள்ளை கொஞ்சம் பொறு. சத்தம் நிற்கட்டும் என்றார்.

ஏனெனில், தொடர்ச்சியாக எறிகணையை வீசிவிட்டு, பின் வேறு பக்கம் மாற்றியடிப்பார்கள். அந்த இடை வெளியில் தான் காயப்பட்டவர்களை தூக்கி வைத்தியசாலைக்கு அனுப்பு வார்கள்.

போரிலே எந்த ஆயுதம் பாவிக் ககூடாது என உள்ளதோ அத் தனை ஆயுதங்களும் எம் மீது பாவிக்கப்பட்டது. இப்போது ஏவிய எறிகணைகள் 'கொத்துக் குண்டு' என்று சொல்வார்கள். முதலில் ஒரு தடவை வெடித்து பிறகு மீண்டும் சிதறலாக பரவி வெடிக் கும். அதிகமானவர்களை காயப்படுத்தும்.

நான் எறிகணை வீச்சு நிற்கவும், பதறி யபடி மிதிவண்டியை எடுத்துக் கொண்டு ஓடினேன். நெஞ்சம் முழுவதும் ஒரே பய மாக இருந்தது. நாங்கள் இருந்த காணிப் பக்கமாக சனம் ஓடியது தெரிய மீண்டும் பதறியபடி வளவை அடைந்தேன். அங்கு நான் கண்ட காட்சி! மிதிவண்டி எப்படி விழுந்தது நான் எப்படி கத்திக்கொண்டு ஓடினேன். எதுவுமே தெரியாது. ஐயோ! கடவுளே!! என் பிள்ளைகள்!! என கதறிய படி ஓடினேன்.

நான் வளவுக்குள் வந்த போது அனை வரும் என் கொட்டிலை பார்த்துக் கொண்டு இருந்தார்கள். ஒரே புகை மூட்டமாக இருந் தது. உள்ளே என் பிள்ளைகள் இருவரும் பதுங்குழியினுள் படுத்து இருந்தார்கள். என்னைக் கண்டதும் அம்மா! என்று கத்தி யபடி ஓடி வந்து கட்டிப் பிடித்துக் கொண் டார்கள். அவர்கள் இருந்து கோலமும், ஓடி வந்து கட்டிப் பிடித்த வேகமும் எனக்கு அவர்கள் பயந்து போய் இருப்பது தெரிந் தது. எனக்கு என்ன செய்வதென்றே தெரி யவில்லை. கத்தி கதறி அழுது விட்டேன். இன்று எழுதும் போது சாதாரணமானதாக தெரியும். ஆனால் அன்று நான் அனுபவித்த வலி, பயந்த பயம் என்றும் மறையாது.

அம்மா! ஷெல் எங்க வீட்டுக்கு மேலே வெடிக்க, நான் தங்கச்சியோட பங்கரில் இருந்தேன். வெளியே போகவில்லை என்று பயம் தீராத குரலில் மகன் கூறினான் வெளியே வந்து பார்த்தபோது எறிகணை துண்டுகள் பரவலாக எல்லா இடமும் சிதறிக் காணப்பட்டன.

இத்தாக்குதலில் நிறைய அப்பாவி பொது மக்கள் காயமடைந்தும் கொல்லப்பட்டும் இருந்தார்கள். எறிகணை என் வீட்டுக்கு மேல் வெடித்தமையாலும், கொத்துக் குண்டு என்பதால் பரவிப் போனதாலும் அன்று நாம் பெரிய ஆபத்திலிருந்து தப்பி னோம்.

நிம்மதியற்ற வாழ்க்கை வாழ நாம் என்ன பாவம் செய்தோம்? தமிழனாய் பிறந்தது குற்றமா? அல்லது எமக்கென்று ஒரு நாடு வேண்டுமென்று போராடியது குற்றமா? முப்படை கொண்டு தன் நாட்டு மக்களையே அழித்த பெருமை, வரலாறு சிறிலங்கா அரசையும் ராஜபக்சக்களையுமே சாரும்.



தொடரும்....

# ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல்




# உலக அரசியலை புரிய வைக்கும் நூல்

**தீபச்செல்வன்**



ஈழத் தமிழர்கள் தம்மை பாலஸ்தீன மக்களுக்கு ஒப்பானவர்களாக கருதிக்கொள்ளுகின்ற ஒரு நிலை இருக்கிறது. பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவானதொரு போக்கு ஈழத்தில் நெடுங்காலம் நிலவுகிறது. அதே வேளை தமக்கென்று ஒரு நாடற்ற நிலையில் இஸ்ரேலை உருவாக்கிய இஸ்ரேலியர்களிடம் இருந்தும் நாம் கற்றுக்கொள்ள பல விடயங்கள் உண்டென்ற பார்வையும் சிலரால் முன்வைக்கப்படுகிறது.

இந்த சிக்கலான அரசியலை புரிந்து கொள்ள ஜீவநதி பதிப்பகத்தின் 351 ஆவது வெளியீடாக ஐங்கரன் விக்கினேஸ்வரா எழுதிய 'ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல்' எனும் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியாகி உள்ளது.

உலக அரசியல் சார்ந்த விடயங்களை நாம் அதிகமும் கற்றுக்கொள்வது இன்றைய உலக அரசியலின் போக்கை புரிந்து கொள்ளவும் 'ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல்' எனும் கட்டுரைத் தொகுப்பு நூல் உதவும் என இந்நூலின் முன்னுரையில் எழுத்தாளர் தீபச்செல்வன் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச விடுதலை போராட்டங்கள் குறித்த ஆழமான புரிதலை எழுத்தாளர் ஐங்கரன் கொண்டிருப்பதற்கு உலக வரலாறு குறித்த அவரது அரசியல் அறிவும், உலக அரசியல் குறித்த அவரது ஆழமான புரிதலும் தான் அடிப்படையானவை. உலக அரசியலின் முகங்களை, ஆயுத அரசியலின் அர்த்தங்களை, ஒப்பந்தங்களின் உள்ளடக்கங்களை, சமகால உலக அரசியலில் பொதிந்துள்ள தந்திரங்களின் முகங்களை என இவர் தன் எழுத்துக்களின் வழியாக தரும் செய்திகள் மிகவும் அதிர்வு தரக்கூடியவை என்றும் இந்நூலின் முன்னுரையில் எழுத்தாளர் தீபச்செல்வன் குறிப்பிட்டுள்ளார்.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஒரு பங்காளனாக, செயற்பாட்டாளனாக தன் பயணத்தை தொடங்கிய விக்கினேஸ்வரா ஐங்கரன் அவர்கள், எழுத்து வழியாக மிக நெடுங்காலமாக ஈழ விடுதலைக்கும் இலக்கியத்திற்கும் பெரும் பங்களிப்பை செய்து வருபவர். இன்றுவரை எழுத்தாகட்டும், மனிதாபிமானச் செயல்களாட்டும் துடிதுடிப்பான ஒரு இளைஞனாகவே எனக்கு எழுத்துக்களின் வழியும் செயற்பாடுகளின் வழியும் அவர் தென்படுகின்றார்.

கவிதைகள், கட்டுரைகள், பத்தி எழுத்துக்கள் என்று இடையறாத பயணத்தை தொடர்கின்ற ஐங்கரன், ஈழ விடுதலைப் போராட்ட காலத்தில் வெளிவந்த முக்கிய இலக்கிய நூல்கள் சிலவற்றிலும் பின்களப் பணியாளனாக இருந்து செயற்பட்டும் வந்திருக்கிறார். இலங்கைப் பத்திரிகைகளிலும் சர்வதேசப் பத்திரிகைகளிலும் அவர் எழுதி வரும் பல்வேறு துறைசார்ந்த கட்டுரைகள் இன்றளவும் முக்கியமானவை. அவை பல நூல்களாகவும் வெளிவந்துள்ளன.

அரசியலை, மக்கள் உணர்வு நிலையை, போராட்டத்தை, பல்வேறு விழிப்புணர்வூட்டும் செய்திகளை மிகவும் சுவாரசியமான முறையில் இவர் எழுதுகின்றார். 'வணக்கம் இலண்டன்' இணையத்தில் இலக்கியம் மற்றும் அபுனைவுகள் பகுதியில் இவரது கட்டுரைகள் பல பதிவேற்றப்பட்டுள்ளன.அவற்றுக்கு வணக்கம் இலண்டன் இணையதளத்தின் வாசகர்கள் மத்தியில் பெருத்த வருவேற்பு காணப்படுகின்றமை இங்கு குறிப்பிட வேண்டிய செய்தி.

புலம்பெயர்ந்து அவுஸ்திரேலிய மண்ணில் வாழ்கின்ற போதும், அவரது நினைவுகள் யாவும் ஈழத்தை சுற்றியும் ஈழ விடுதலையைச் சுற்றியுமாகவே இருக்கிறது. அதனால்தான தினம்தோறும் ஈழம் குறித்து பல கட்டுரைகளை எழுதிக் கொண்டே இருக்கின்றார். எனக்கு மாத்திரமல்ல, பலருக்கும் அது ஆச்சரியத்தை ஏற்படுத்துகின்றது. ஈழத்தின் சமகால நிகழ்வுகளை மாத்திரமின்றி, வரலாற்று நிகழ்வுகளையும் நினைவுபடுத்தும் பல முக்கிய கட்டுரைகளை எழுதிக் கொண்டிருக்கிறார்.

ஈழத்தின் இலக்கிய ஆளுமைகளைப் பற்றியும், ஈழத்தின் பத்திரிகைத்துறை சார்ந்த தகவல்களையும் பத்திரிகைத்துறை ஆளுமைகள் சார்ந்த தகவல்களையும்கூட தன் எழுத்துக்களில் பதிவு செய்திருக்கிறார். காலத்திற்கு முந்தைய தலைமுறையில் இருந்து இன்றைய தலைமுறை வரையான அவரது இந்த அவதானம் வியப்பையும் ஆச்சரியத்தையும் தருகிறது.

சில மாதங்களின் முன்னர் வெளியான 'பாலஸ்தீனம் எரியும் தேசம்' என்ற கட்டுரை நூல் வாசகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. ஈழத்தில் அபுனைவு சார்ந்த நூல் ஒன்று அதிகம் விற்றிருப்பது என்பது மகிழ்ச்சி அளிக்கின்ற செய்தியாகும்.

தற்போது 'ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல்' என்ற புதிய நூல், உலக அரசியலை புரிந்து கொள்ள உதவும் இவரின் எழுத்துக்களில் இதுவும் குறிப்பிடத்தக்க ஒரு தொகுதியாக இருக்கும் என்றும் எழுத்தாளர் தீபச்செல்வன் இந்நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

# வியர்வைச் சட்டை

முல்லை பாஸ்கர்

வியர்வைச் சட்டை.
மே 1
அனைவரும் அறிந்த நாள்!!
உனக்கு
வாழ்த்து கூற
உலகமே காத்துக் கிடக்கு!

சொட்டு சொட்டாய்
விழுகின்ற
வியர்வைத் துளியால்
பூமிப் பந்தை
புல் பூக்கச் செய்தவன் நீ!
உன் உறக்கத்திற்கு
தலையணையோ
மாத்திரைகளோ
தேவையில்லை!!

உன் பசிக்கும்
மருந்துகள்
தேவை இல்லை!

இரண்டாம் பரிசால் மட்டுமே
முதல் பரிசுக்கு மரியாதை.
உன்னால் மட்டுமே
ஒரு
முதலாளியை உருவாக்க முடியும்!

நீ சேற்றில் இறங்கினாய்
நாங்கள்
சோற்றை உண்டோம்!
நீ கற்களை சுமந்தாய்
நாங்கள் வீட்டில் உறங்கினோம்!
நீ செருப்பை தைத்தாய்
நாங்கள் சூடின்றி நடந்தோம்!

உனக்கு
வாழ்த்துக் கூற
ஒரு நாள் போதாது!
ஒவ்வொரு நாளும்
வாழ்த்துக் கூறி
நன்றி மறவோம்!



# ஹவானா சிண்ட்ரோம்



ஐங்கரன்

## ரஷ்ய உளவுமைப்பின் நுண்ணலை தாக்குதல்:

# அமெரிக்க தூதரக அதிகாரிகளை தாக்கும் மூளை நோய்

> மனித உடலை ஊடுருவும் மின்காந்த கதிர்வீச்சைக் கொண்டு நடத்துவதும், நுண்ணலைகள் மூலமாகத் தாக்குவதுமான திறன் அமெரிக்கா, சீனா மற்றும் ரஷ்யாவிடம் மட்டுமே இருப்பதாக கூறப்படுகிறது. ஹவானா சிண்ட்ரோம் தற்போது அமெரிக்க உளவுப் பிரிவுக்கு எதிராக ரஷ்யாவே இந்த தாக்குதலை முன்னெடுத்தி ருக்கலாம் என சந்தேகிக்கப் படுகிறது.

அமெரிக்காவின் உளவுத்துறையான சிஐஏ அதிகாரிகள் வெளிநாடுகளில் மர்மமான முறையில் மூளைப் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள் என்ற அதிர்ச்சி தகவல் நீண்ட காலமாக வெளியாகி உள்ளது. சிஐஏ அதிகாரிகள், தூதர்கள், பாதுகாப்புப் படை அதிகாரிகள் என இதுவரை இருநூறு பேர் மூளைப் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளதாக அமெரிக்க அரசு தகவல் வெளியிட்டுள்ளது.

ஒற்றை தலைவலி, மூக்கில் இருந்து ரத்தம் கொட்டுதல், தலை சுற்றல், வாந்தி என பாதிக்கப்படும் அதிகாரிகள், இறுதியில் மூளையில் பாதிப்பு ஏற்பட்டு பணியாற்ற முடியாமல் அவதியுறும் நிலைக்கு செல்கிறார்கள் என கூறப்படுகிறது.

அமெரிக்க உளவுபிரிவுக்கு எதிராக ரஷ்யா நுண்ணலை (மைக்ரோவேவ்) தாக்குதலை முன்னெடுத்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. அமெரிக்க ராஜதந்திரிகளை பீடிக்கின்ற மர்ம நோய்க் குறி, அமெரிக்க வீரர்களிடையே பரவும் அபாயம் உள்ளதாக அறியப்படுகிறது.



இந்த மர்ம நோய் மைக்ரோவேவ் தாக்குதலா அல்லது மின்காந்த கதிர் வீச்சு தாக்குதலா என ஆராயும் அமெரிக்க அறிவியலாளர்களும் பாதுகாப்பு வல்லுநர்களும் இந்த நோயின் மர்மங்கள் குறித்து அறிய முயன்று வருகின்றனர். அல்லது ஏதேனும் கருவிகளது கவனக்குறைவான பாவனையா அல்லது கண்ணுக்குப் புலப்படாத ஒலி ஆயுதம் (sonic weapon) மூலமான தாக்குதலா அதற்குக் காரணம் என்பது இன்னமும் தெரிய வரவில்லை.

**கியூபாவில் 2016 அமெரிக்க தூதரகம்:**

முதலில் 2016 இல் சீனா, கியூபா, ஐரோப்பிய நாடுகள் மற்றும் சில ஆசிய நாடுகளில் பணியாற்றியவர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டதாக தெரியவந்துள்ளது. இந்த மூளை பாதிப்பிற்கு ‘ஹவானா நோய்க்குறி’ (Havana Syndrome) எனப் பெயரிடப்பட்டது.

2016 இல் முதன் முதலில் கியூபாவில் ஹவானா நகரில் சில அமெரிக்க ராஜதந்திரிகள் மத்தியில் இந்த மர்ம நோய் அறிகுறிகள் தென்பட்டன.

மனித உடலை ஊடுருவும் மின்காந்த கதிர்வீச்சைக் கொண்டு நடத்துவதே இந்த தாக்குதல். இது போன்ற ஆயுதங்கள் அமெரிக்கா, சீனா மற்றும் ரஷ்யாவிடம் இருப்பதாக கூறப்படுகிறது.

இதனாலேயே அமெரிக்க அதிகாரிகள் மைக்ரோவேவ் தாக்குதலுக்கு இலக்காகிறார்களா என்ற சந்தேகமும் வலுத்துள்ளது.தற்போது ரஷ்யாவே அமெரிக்க உளவுபிரிவுக்கு எதிராக இந்த தாக்குதலை முன்னெடுத்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. ஆனால் அதனை ரஷ்யா மறுத்துள்ளது.

கடந்த காலங்களில் இதுபோன்ற பாதிப்புகளை அமெரிக்க அதிகாரிகள் எதிர்கொண்டது குறித்து ஆய்வு செய்த அமெரிக்காவின் தேசிய அறிவியல் வாரியம், மைக்ரோவேவ் தாக்குதல் நடந்திருக்க சாத்தியம் உள்ளதாக கூறி உள்ளது. எனவே, இதுகுறித்து பைடன் நிர்வாகம் விசாரணையை தீவிரப்படுத்தி உள்ளது.

அதன் பிறகு அமெரிக்காவிலும் உலகின் வேறு சில நாடுகளிலும் மர்மமான அந்த நோயின் அறிகுறிகள் பலருக்கு ஏற்பட்டன. ராஜதந்திரிகள், தூதரகப் பணியாளர்களை மட்டுமே தாக்கி வருகின்ற அந்த நோய் எவ்வாறு ஏற்படுகின்றது என்பது தொடர்ந்தும் பெரும் மர்மமாகவே இருந்து வருகிறது.

முன்னர் ட்ரம்ப் நிர்வாக காலப்பகுதியில் வெள்ளை மாளிகையிலும் சிலருக்கு அத்தகைய பாதிப்புகள் ஏற்பட்டிருந்தன. சிலருக்கு இந்நோய் அறிகுறிகள் தோன்றுவதற்கு முன்னர் காதில் பேரொலி கேட்ட உணர்வு இருந்தமையும் தெரிய வந்துள்ளது.

**2021 ஆஸ்திரியாவில்:**

ஆஸ்திரிய தலைநகர் வியன்னாவில் இருக்கும் அமெரிக்க தூதரக ஊழியர்கள் மற்றும் நிர்வாக ஊழியர்களுக்கு 2021 ஜூலையில் உண்டாகியுள்ள மூளைக் கோளாறு குறித்து அமெரிக்க அரசு அப்போது விசாரித்தது.


ஜோ பைடன் அமெரிக்க அதிபராகப் பதவியேற்றதற்குப் பிறகான காலத்தில், ‘ஹவானா சிண்ட்ரோம்’ எனும் மர்மமான மூளைக் கோளாறு போன்ற பாதிப்பு தங்களுக்கும் வந்துள்ளது என 200 க்கும் மேற்பட்ட அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த பாதிப்பு கியூபாவில் 2016 - 17 காலகட்டத்தில் முதல் முறையாகக் கண்டறியப்பட்டது. கியூபாவின் தலைநகர் ஹவானாவின் பெயரால் அன்றுமுதல் அழைக்கப்படுகிறது. இந்த மர்மமான மூளைக் கோளாறு ஏன் உண்டாகிறது என்று தெளிவாகவில்லை. அப்போது நுண்ணலைகள் நேரடியாகத் தாக்குவதால் இது உண்டாகலாம் என்று அமெரிக்க ஆய்வாளர்கள் கருதினர்.

**கியூபாவை குற்றம்சாட்டிய அமெரிக்கா:**

கியூபாவில் பணிபுரிந்த அமெரிக்க மற்றும் கனடா நாட்டைச் சேர்ந்த தூதரக வெளியுறவுத் துறை அதிகாரிகள், தங்களுக்கு தலைசுற்றல், நிலைப்படுத்திக் கொள்ள முடியாமை, கேட்கும் திறன் குறைவது, மன அழுத்தம் போன்ற பிரச்சனைகள் ஏற்படுவதாகக் கூறியுள்ளனர். கியூபா தொடர்ந்து சோனிக் தாக்குதல்களை நடத்துவதாக அமெரிக்கா குற்றம் சாட்டியது. ஆனால் அதை கியூபா மறுத்து





வருகிறது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையிலான பதற்றம் அதிகரித்தது. உடல் நலம் குன்றிய வெளியுறவுத்துறை அதிகாரிகளுக்கு மூளையில் அசாதாரணத்தன்மை (brain abnormalities) பிரச்சனை இருப்பதாக கடந்த 2019ஆம் ஆண்டு ஓர் ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த அறிக்கையையும் கியூபா மறுத்திருக்கிறது.

இப்பிரச்சனையின் காரணத்தைக் கண்டுபிடிக்க ஆஸ்திரியா, அமெரிக்க அதிகாரிகளோடு இணைந்து செயல்பட்டு வருவதாக ஆஸ்திரிய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் செய்தியறிக்கையில் கூறப்பட்டுள்ளதாக ராய்டர்ஸ் மேற்கோள் காட்டியது.

## உலகின் பல பகுதிகளிலும் ஹவானா சிண்ட்ரோம்:

நீண்ட நெடுங்காலமாக வியன்னா ராஜீய ரீதியிலான செயல்பாடுகளின் மையப் புள்ளியாக இருந்து வருகிறது. அங்கு அமெரிக்காவுக்கு மிகப்பெரிய அளவில் ராஜீய அமைப்புகள் இருக்கின்றன. 2015ஆம் ஆண்டு ஈரானுக்கும் அமெரிக்கா உள்ளிட்ட வளர்ந்த நாடுகளுக்கும் இடையில் கையெழுத்தான அணுசக்தி ஒப்பந்தத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வர, வியன்னா மறைமுகமாக பேச்சுவார்த்தை நடத்தி வந்தது.

உலகின் பல பகுதிகளிலும் ஹவானா சிண்ட்ரோம் நோயால் பாதிக்கப்படுபவர்கள் இருப்பினும், ஹவானா நகரத்துக்கு அடுத்தபடியாக, அதிக அளவில் இந்நோயால் பாதிக்கப்படுவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருப்பது வியன்னாவில் தான் என அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றனர்.

## அமெரிக்க ராஜதந்திரிகளை தாக்கும் மர்ம நோய்:

ஜேர்மனியில் பேர்லினில் உள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் இருவருக்கு ஹவானா நோய்க்குறிகளை ஒத்த பாதிப்புகள் 2020இல் ஏற்பட்டிருந்தன. இன்னோர் சம்பவம், 2023இல் அமெரிக்காவின் துணை அதிபர் கமலா ஹரிஸ் தனது ஆசிய விஜயத்தின் ஒரு கட்டமாக சிங்கப்பூரில் இருந்து வியட்நாம் புறப்பட ஆயத்தமான அச்சமயத்தில் வியட்நாமின் ஹனோய் நகரில் உள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் இருவருக்கு ஹவானா நோய்அறிகுறிகள் ஏற்பட்டன. இதனால் அவர்கள் அவசரமாக அமெரிக்காவுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

ஹனோய் தூதரகத்தில் ஹவானா நோய் கண்டறியப்பட்டதை அடுத்துத் துணை அதிபர் கமலா ஹரிஸின் வியட்நாம் பயணம் பல மணி நேரங்கள் தாமதமடைந்தது என்று அமெரிக்க ஊடகங்கள் குறிப்பிட்டன.

'ஹவானா நோய்க்குறி' (Havana Syndrome) என்பது உலகெங்கும் அமெரிக்காவின் ராஜதந்திரிகளைத் தாக்கி வருகின்ற மர்மமான ஒரு நோயின் அடிப்படைத் தோற்ற நிலை பற்றி இன்னமும் முழுமையான ஆதாரம் கிடைக்கவில்லை.

# வாழ்த்துகள்



மட்டக்களப்பு வின்சன் பாடசாலையின் பழைய மாணவியான பூஜா உமா சங்கர் ஐக்கிய இராச்சியத்தில் சாதனை படைத்துள்ளார்.

கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரான கு. உமாசங்கர், ஓய்வு பெற்ற ஆசிரியை ரசிகா நில்மினி உமாசங்கர் அவர்களது மகளாகிய இவர் சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் விமான பொறியியல் துறை பட்டம் பெறவுள்ள நிலையில் அவரின் அந்த துறையிலான அசாத்திய திறமை காரணமாக உலக தரம் வாய்ந்த நிறுவனங்களால் பேட்டி காணப்பட்டார்.

இது பெண்களுக்கு மட்டுமல்ல எமது மண்ணுக்கே பெருமையாகும். விமான துறையில் சாதிக்க விரும்புவர்களுக்கு இவரின் சாதனை ஒரு உந்து சக்தியாக அமையும்.



# வளவு

## கொற்றவை

கிரீச்சிட்ட கேற்றைத் திறந்துகொண்டு வந்தார் சுப்பிரமணி ஐயாவின் பக்கத்து வீட்டுக்காரர் சிவராமன். அவர் வேர்த்துக் களைத்து இருந்ததுடன் சோர்ந்தும் இருந்தது அப்பட்டமாகத் தெரிந்தது.

''என்ன சிவம்! இத்தினை வருசம் கழிச்சு காணிக்குப் போய் வாறீர். இப்பிடி சலிச்சுக் கொள்ளுறீர்.... ஏன்? நாங்களே புதினம் அறிய எவ்வளவு ஆவலா இருக்கிறம்... ஏன்டாப்பா..!. நீ கூட நாளைக்கு காணியள் விடுவிக்கினம் எண்டு துள்ளிக் கொண்டு திரிஞ்சாய்... ராவுராவா நித்திரை கூட கொள்ளேல்ல... விடிஞ்சதும் விடியாததுமா அங்க போட்டாய்... ஏன் அவங்கள் காணியளைத் தரேல்லையே...?

ஆர்வம் தாங்காமல் அடுக்கடுக்காக கேள்விகளால் துளைத்தார் சுப்பிரமணி ஐயா. களைப்பாக குந்தில் அமர்ந்த சிவராமன் முதலில் அருகில் இருந்த செம்பைத் தூக்கி அண்ணாந்து மடமடவென்று தண்ணீர் அருந்தினார். அவருக்கு தேநீர் போடவென்று உள்ளே சென்ற இராசமணி அம்மாவும் ஆர்வம் தாங்க முடியாமல் வெளியே வந்து பார்த்துக் கொண்டிருந்தா.

பாதிச் செம்புத்தண்ணி காலியாகிய பின் தன்னை ஓரளவு ஆசுவாசப் படுத்திக் கொண்டார் சிவராமன்.


''சேச்சே... காலமை ஒம்பது மணிக்கே உள்ளுக்கை விட்டிட்டாங்கள்.... அங்கை பாத்தால் முழு காணிக்காரரும் என்னைப் போல வந்து காத்துக் கொண்டிருந்தினம். எல்லாருக்கும் எப்படா எங்கடை இடத்தைப் பாப்பம் எண்டு ஒரு ஏக்கம் கண்டியோ...! என்ரை காணியில ஆமிக்காரன் இருந்திருக்கிறான். வளவு அவ்வளவு மோசமில்லை.... கொஞ்சம் சுத்தமாத்தான் கிடந்துது...''

''அப்ப பின்னை ஏனண்ணை கவலைப்படுகிறியள்...?'' சிவராமனை இடைமறித்தா இராசமணி அம்மா.

''பொறு தங்கச்சி! பொறு! மிச்சக் கதையையும் கேளன்...'' சிவராமன் தொடர்ந்தார். அவர் போடும் புதிரில் ஆனந்தன் கூட வேலையை விட்டு விட்டு பார்த்துக் கொண்டிருந்தான்.

''வளவு பறுவாயில்லை. வளவுக்கு வாற ஒழுங்கையில அவங்கடை வாகனங்கள் ஓடித் திரிஞ்சிருக்கு. அந்த மாதிரி ரெண்டு பக்கமும் கல்லுகள் அடுக்கி ஒழுங்கையே ரோட்டு மாதிரி இருந்துது... அங்கால ரெண்டு மூண்டு வளவுகளைச் சேர்த்து வைச்சிருந்திருக்கிறாங்கள்... காணிக்காரர் எங்களுக்கு எல்லையள் தெரியும்... எண்டாலும் நில அளவையாளரைக் கூட்டிக்கொண்டு போய் முறைப்படி அளக்க வேணும்...''

''அங்க எங்கடை வளவிலதான் அந்த ஏரியாவிலயே பெரிய கிணறு இருந்தது எண்டு சொன்னனான் அல்லோ...? அதை முழுசா மூடீட்டாங்கள்... துலைவாருக்கு கிணத்தைக் காண என்ன பயமோ தெரியேல்லை...''



''ஏனண்ணை..?'' எடுத்துக் குடுத்தா இராசமணி அம்மா.

''ஏன் தம்பி வசந்தன்! நீங்கள் உங்கால் பக்கம் புழங்கேக்கை கிணறுகள் இருந்ததோ?'' ஆனந்தனிடம் கேட்டார் சிவராமன். அவர் ஒரு தீவிர விசுவாசி. எங்க கூட்டம் நடந்தாலும், ஒரு வேலைத்திட்டம் நடந்தாலும் அங்கே வந்து பங்கெடுத்து விடுவார். அவருக்கும் ஆனந்தனை நன்கு தெரியும்.

''ஓமோம்... ஆரம்பத்தில இருந்தது. பிறகு அதுவே தங்களுக்கு ஆப்பாகீடும் எண்டு பயப்பிடத் தொடங்கீட்டாங்கள். ரெண்டு மூண்டு இடத்தில காணாமப்போன ஆமிக்காரரை கிணத்துக்கை கண்டுபிடிச்சதுக்குப் பிறகு அவங்களுக்கு கொஞ்சம் கிலிதான்... அது மட்டும் காரணமில்லை.... கிணத்துக்கை குண்டு வைக்கப் போறாங்கள் எண்டும் பயந்திருக்கிறாங்கள். ஆருக்குத் தெரியும்? முகாமுக்குள்ள இருக்கிறவங்களுக்கு என்னத்தைக் கண்டாலும்.... ஒரு சின்ன சத்தம் வித்தியாசமாக் கேட்டாலும் பயப்பிடிறதை பார்த்திருக்கிறம்...'' ஆனந்தன் பதிலளித்தான்.

''அந்தப் பிரதேசத்தில இருந்த அத்தினை கிணறுகளையும் மூடீட்டாங்கள். ஒரு கக்கூசுக் குழியும் இல்லை... எல்லாத்தையும் இடிச்சு மூடீட்டாங்கள். அங்கால கொஞ்சம் ஆழம் குறைஞ்ச கிணறுகள் இருந்த பக்கத்தில கிணத்தை கக்கூசு குழியா பயன்படுத்தினவங்களாம். அங்கத்தை சனம் சொல்லிச்சுது....''



''ஐயோ..! இதென்ன அநியாயம்? அப்ப அந்த துலைவார் தண்ணிக்கு என்ன செய்தவங்கள்? இருந்த கக்கூசுகளை இடிச்சு தங்களுக்கு புதுசாக் கட்டினதுக்கும் குழிக்குள்ள குண்டு வைச்சிடுவினம் எண்ட பயமாக்கும்... என்னப்பா?'' சுப்பிரமணி ஐயாவைப் பார்த்து கேட்டா இராசமணி அம்மா.

''எல்லா இடத்திலயும் குழாய்க் கிணறு அடிச்சு வைச்சிருக் கிறாங்கள் என்ரை வளவிலயும் ஒண்டு இருந்துது. சுத்தவர சீமெந்தால ஒரு சின்ன தொட்டி மாதிரிக்கட்டி இருந்தாங் கள். போகேக்க கிணத்தின்ரை பம்பைக் கொண்டு போட்டா ங்கள்.... நான் இனி புதுசா ஒண்டு போட்டாக் காணும்...''

''அது சரி..! வீடு கிடக்கோ இல்லையோ...? குடி புகுந்து பத்து நாளையில வீட்டை விட்டிட்டு ஓடி வந்தது எண்டல்லை சொன்னனீ...?'' இடையில் புகுந்தார் சுப்பிர மணி ஐயா.

''புதுசாக் கட்டின வீடு கிடக்கு. வெளிச் சுவர் எல்லாம் துவக்குச் சூட்டுக் காயங்கள். அதே காணீக்கை நாங்கள் முந்தி இருந்த பழைய வீடும் இருந்தது... அது இப்ப இல்லை... காணீக்கை நிண்ட பனை மரங்கள், தென்னையளைக் காணேல்லை.... ஒண்டு ரெண்டு தென்னைதான் நிக்குது ... ஒரு நாலைஞ்சு மாமரங்கள் இன்னும் இருக்கு... அதோட அங்க இங்க எண்டு வேற ரெண்டு மூண்டு மரமும் இருக்கு...''

''முந்தி வளவு சோலை மாதிரி இருக்கும் இப்ப வெளியாக் கிடக்கு.... அவங்கள் வீட்டுக்கு முன்னாலை பூங்கண்டுகள் வைச்சிருக்கிறாங்கள்.... அது பூத்துக் கிடக்கு...''

''உள்ளுக்கு..?''

''வீட்டுக்குள்ளை எல்லாம் தங்களுக்கு ஏத்த மாதிரி மாத்தி வைச்சிருந்திருக்கிறாங்கள்... பெயின்ற் அடிச்சு இருக்கினம்... சுவரில சித்திரமும் கீறி இருந்துது. இடை யில சுவரை இடிச்சு 'பார்' ஒண்டு கட்டியிருக்கினம். அதோட கைதியளை வைச்சு சித்திரவதை செய்யிற மாதிரி ஒரு அறை யும் இருந்துது. யன்னல் இல்லாமை மூச்சடங்கிற மாதிரி ஒரு சின்ன இடம்... அதில பெரிய பெரிய சங்கிலியள் சுவரோட பிணைச்சுக் கிடந்துது... நிலம், சுவர் எல்லாம் ரத்தம் பீச்சி யடிச்சமாதிரி கிடந்துது. கண்டவுடனை எனக்கு மயக்கம் வந்திட்டுது...''

''ஐயையோ! ஆரும் பக்கத்தில நிண்டவையோ?''

''ஓமோம்... விடுவிச்ச காணியள் பாக்க சில 'யு ரியூப்' பெடியளும் வந்திருந்தவை. பாத்தா... ஆமிக்காரன் இருந்த எல்லா வீடுகளிலையும் இப்பிடி ஒரு அறை இருந்திருக்கு... அங்கால ஆமி கொமாண்டர் தங்கின ஒரு வீடு இருக்குதாம்... அங்க சித்திரவதை அறையை நீங்கள் பாத்தா செத்தே போடு வியள் எண்டு சனம் சொல்லிச்சுது...''

''கதவுகள், யன்னலுகள் எல்லாம் உடையாமக் கிடக்கோ அண்ணை?'' ஆனந்தன் வினவினான்.

''இவ்வளவு நேரமும் நான் சொன்னது ட்ரெயிலர்தான்... இனித்தான் மெயின் பிக்சருக்கு வரப்போறன்... இந்தப் போக்கிலி சிங்களவனையே நல்லவன் எண்டு ஆக்கிப் போட்டுதுகள் எங்கடை கேடு கெட்ட சனம்... தெரியுமோ?''

''ஏன்? என்னாச்சு.?'' ஒருமித்த குரலில் வினவினார்கள் அனைவரும்.

''காணிக்காரரோடை சேர்ந்து கள்ளப் படையும் இறங் கியிருக்கு. அவங்கள் சரியான அடாவடியா நிக்கிறாங்கள். காணிக்காரர் நிற்கத் தக்கதாகவே வந்து எல்லாம் புடுங்குறாங் கள். கேக்கப் போறவையோட சண்டித்தனம் அல்லோ செய் யினம்? காணிக்காரரிட்டையே உறுதியைக்காட்டு எண்டு ஒரே ஆர்ப்பாட்டம். அது தங்கடை காணி எண்டு அடிச்சுச் சொல் லுறாங்கள்.... களவெடுக்க வந்தவையில இருந்த பெம்பி ளையளைப் பாக்க வேணும்... அப்பப்பா...! என்ன வாய்? அதுகள் ஓடியோடி ஒரு சாமான் விடேல்ல... அங்க முதல்ல வாகனம் கொண்டந்து ஏத்தினது கள்ளர்தான்...''

எல்லோரும் வாயடைத்து கேட்டுக் கொண்டிருக்க சிவரா மன் தொடர்ந்தார்.

''எங்கடை காணிக்கு முதல் ஒழுங்கையில ஒரு வீடு. பாக்கவே புத்தம் புதுசா இருத்தது. ஆமிக்காரன் கட்டியிருக் கிறான். வெள்ளையடிச்ச வீடு. நான் பாக்கேக்க கதவுகள், யன்னலுகள் எல்லாம் இருந்துது. கொஞ்ச நேரத்தில கள்ளர் புடுங்குறாங்கள் எண்டு யாரோ கூப்பாடு போட்டிச்சினம். நாங்கள் எல்லாரும் அங்க ஓடிப் போனம்... கதவுகள், யன்ன லுகள், நிலையள் எல்லாம் கழட்டி வாகனத்தில ஏத்தி வைச் சிருந்தாங்கள். ரெண்டு பேர் கூரையில ஏறி நிண்டு 'சீற்'றைக் கழட்டிக் கொண்டிருந்தாங்கள்...''

''அந்தக் காணிக்காரியும் கூடியமட்டும் சண்ணை போட் டுப் பாத்தா.... அவங்கள் ஒண்டுக்கும் அசரேல்லை... கேக்கப்போன எங்களுக்கும் கத்தி காட்டியல்லோ விதண் டாவாதம் கதைக்கிறாங்கள்? பாத்துக் கொண்டு இருக்கவே சீற் முழுக்க கழட்டி, கூரை மரமும் கழட்டி ஏத்திப் போட் டாங்கள். வீடு மொட்டையாப் போச்சு. இரும்புக் கம்பி யளை எடுக்க எண்டு சுவரை இடிச்சு விழுத்தி சுத்தியலால உடைச்சு.... பாக்கவே ஏலாமப் போச்சு....''





''இந்தக் கள்ளப் படை ஆரெண்டு தெரியேல்லை. இங்க நாங்கள் நிக்க என்ரை வீட்டுக் கதவைக் கழட்டுறங்கள் எண்டு ஆரோ கத்தஅங்க ஓடினம்... அதுக் கிடையில ரெண்டு கதவுகளை நிலையோட கழட்டிப் போட்டாங்கள்...''

''ஐயையோ..! என்ன செய்தனீங்கள்?''

''அங்கினை நிண்ட பெடியளும் என்னோட வர, அவங்கள் விட்டிட்டுப் போட்டாங்கள். எல்லா வீட்டுக்கும் இதே நிலைதான்... ஆரோ பொலிசுக்கு அடிச்சினம்... அவங்கள் வாகனத்தில வந்து ஒரு ரவுண்டு போய் வீடியோ எடுக்க வந்த பெடியளைத்தான் வெருட்டிப்போட்டு போனாங்கள். கள்ளர் அந்த நேரம் எங்கயோ பம்மீட்டாங்கள்....''

''அப்ப என்னதான் முடிவு.? காணி கிடைச்சும் பிரச்சனை வேற எங்கயோ போகுதே ...''

''எனக்கும் என்ன செய்யிறது எண்டு தெரியேல்லை...'' மனவுளைச்சலுடன் தொடர்ந்தார் சிவராமன்..

''காணி பாக்க வந்த சிலர் தாங்கள் இரவு அங்கயே தங்கப் போறதா முடிவெடுத்தினம். ஆனா, அது பாதுகாப்பில்லை. பட்டப் பகல்லையே கத்தியைக் காட்டுறவங்கள் ராவில கழுத்தறுத்திட்டுப் போகவும் தயங்க மாட்டாங்கள். இல்லையோ...?''

''பேந்து எல்லாருமாச் சேர்ந்து ஒரு முடிவு எடுத்திருக்கிறம். எல்லாத்தையும் கள்ளரட்டை இழக்கிறதுக்குப் பதிலா கழட்டக்கூடிய அத்தினை சாமானையும் ஏஜன்சிக்கு விக்கிறது எண்டு. இதுக்கு ஒரு ஏஜன்சி இருக்காமே? அவங்கள் ஒரு வீட்டுக்கு ரெண்டு லட்சம் குடுக்கிறாங்கள். நானும் குடுத்திட்டன்.''

''அப்ப பிறகு ஏன் யோசிக்கிறியள் அண்ணை?'' இராசமணி கேட்டா.

''அந்த வீட்டில எங்களுக்கு எவ்வளவு ஞாபகங்கள் இருக்கு தெரியுமோ? இப்ப அந்த வீட்டை உரிச்சு வெறும் சுவரை மட்டும் விடுறதைப் பார்க்க ஏலாமை நான் வந்திட்டன் உனக்கு ஒண்டு தெரியுமோ..? நான் வாற வழியில அந்த வெள்ளைவீட்டடியாலதான் வந்தனான். இப்ப அங்க சுவர்கூட இல்லை வெறும் நிலம் மட்டும்தான் இருக்கு யோசிச்சுப்பார். ஆமிக்காரனை விடவும் எங்கடை கேடுகெட்டவங்கள்தான் எங்களுக்கு கூட அநியாயம் செய்திருக்கிறாங்கள். எங்கடை ஞாபகங்களை எங்கடை கையாலேயே அழிக்க வைச்ச இவங்களுக்கு யாராவது தண்டனை குடுத்தே ஆகோணும்...''

ஆனந்தனுக்கும் ஆத்திரமாக இருந்தது. ஆனால், இப்போதிருக்கும் நிலைமையில் என்ன செய்ய முடியும் என்ற இயலாமையாகவும் இருந்தது. சட்டம், ஒழுங்கு எதுவும் இல்லாத ஒரு நாட்டில் கள்ளருக்கு பின்புலத்தில் யாராவது கேடுகெட்ட கட்சிகூட இருக்கலாம். யார் கண்டார்?

ஆனந்தனின் வேலை ஏறக்குறைய முடிவடைந்து விட்டது. நாளை சின்னச் சின்ன ஒழுங்குகள் செய்தால் சரி. அவர்களின் கதையில் இடைப்புகுந்தான் ஆனந்தன்.

''ஐயா..! மன்னிக்கோணும் வேலை கிட்டத்தட்ட முடிஞ்சுது நாளைக்கு மிச்ச சின்ன வேலையளை முடிச்சுத் தாறன். நான் இப்ப வரட்டோ..?''

''ஓமோம்.. தம்பி! இது மட்டுமில்லை நாளைக்கு வேற வேலையளும் கிடக்கு. ராசம்! வசந்தனுக்கு குடுக்கிறதை குடுத்து விடுமன்..''

இராசமணி அம்மா காசுடன் வந்தா. கூடவே பையில் சில பொருட்களும்.

''இதை வெண்ணிலாட்டை குடும் தம்பி. கொஞ்ச பலகாரம் இருக்கு. சாந்திக்கும் உடம்பு சரியில்லை. பிள்ளை படிக்கேக்க சாப்பிடட்டும்.'' பின்னர் குரலைத் தணித்து,

''வசந்தன்! நாளைக்கு உம்மோடை கொஞ்சம் கதைக்கலாமோ?.., என்ரை மன ஆறுதலுக்காகத்தான்...''

'இதைக் கேட்க வேணுமோ அம்மா? உங்களுக்கு அந்த உரிமை இல்லையோ?' சிரித்தபடி விடைபெற்றான் ஆனந்தன். அவவின் மனமாற்றம் ஆறுதலாக இருந்தது. அதே சமயம் அவவின் மனதை அரிக்கும் விடயம் எதுவாக இருக்கும்?

நேரே வைத்தியசாலைக்குப் போனான் ஆனந்தன். சாந்தியை சாதாரண வார்டுக்கு மாற்றியிருந்தார்கள். அவள் அபாய கட்டத்தை தாண்டியிருந்தாள். ஆனந்தனைப் பார்த்ததும் அவளின் சந்தோசத்துக்கு அளவே இல்லை. வீட்டுக்கு வரவேண்டும், வெண்ணிலாவைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டாள். ஆனால் அவள் இன்னும் சில நாட்கள் அங்கு இருந்தாக வேண்டும். அவளுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு வீட்டுக்குப் புறப்பட்டபோது நீண்ட நாட்களுக்குப் பிறகு மனது லேசாகியிருந்தது.

வீட்டில் வெண்ணிலா படபடப்பாக இருந்தாள்.

''அப்பா..! எங்க போனனீங்கள்? உங்கடை ஃபோன் வேலை செய்யேல்லையோ? எவ்வளவு பயமா இருந்துது தெரியுமோ..?''

அவன் ஃபோனுக்கு காசு போட மறந்து விட்டான். நாளைக்கு மறக்காமல் போட வேணும். வெண்ணிலாவை ஆசுவாசப்படுத்தி இருவருமாக உணவருந்தினார்கள், இரவு படுக்கப் போகும்போது அடித்துப் போட்டால் போல உடல் வலித்தது. உலகில் என்ன நடந்தால் என்ன? ஏதோ ஒரு வகையில் வாழ்க்கை ஓடிக் கொண்டுதான் இருக்கிறது.

சிவராமன் அண்ணர் சொன்ன கதையைக் கேட்டுக் கொண்டிருந்ததாலோ என்னவோ, அவனை அடைத்து வைத்தருந்த சித்திரவதைக்கூடம் கனவில் வந்து அவனைத் துன்புறுத்தியது. கால் காயத்தில் இரும்புச் சங்கிலி உராய்ந்த வேதனை இப்போது போலத் தோன்ற..

''அம்மா..! அம்மா!'' என்று நித்திரையில் அரற்றினான் ஆனந்தன்.

தொடரும்.....





# அன்னை பூபதி அவர்களின் 36 வது ஆண்டு நினைவெழுச்சி நிகழ்வு





